# இலங்கையில் நீதி ஏன் மழுப்பலாக உள்ளது: அடையாளமயமான பத்து வழக்குகள் மீதான மீள் கண்ணோட்டம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

ஜனவரி 2021

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) ஆட்சிமுறை மற்றும் முரண் நிலைக்கான தீர்வு போன்ற விடயங்களில் பிரதானமாக கவனம் செலுத்துகின்ற சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதுமான ஒரு ஸ்தாபனமாகும். அரசாங்கக் கொள்கைக் கலந்துரையாடலின் வலுப் படுத்தலுக்கான தேவையில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆராய்ச்சி மற்றும் வாதுரைத்தல் மூலம் அரசாங்கக் கொள்கை தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு, மாற்றீடுகள் இனங் காணப்பட்டு, மற்றும் பரப்புரை செய்கின்றதுமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பற்றுறுதி கொண்டுள்ளது.

இல. 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386
தொலைநகல்: +9411 2081388 Email: info@cpalanka.org
இணையத்தளம்: www.cpalanka.org
மின்னஞ்சல்: info@cpalanka.org
முகநூல்: www.facebook.com/cpasl
டுவிட்டர்:@cpasl

## நன்றியுரைகள்

இந்த அறிக்கை பவானி பொன்சேகா, சரயா சமரக்கோன் மற்றும் குஷ்மிலா ரணசிங்க ஆகியோரால் ஆராய்ச்சி செய்யப்பட்டு எழுதப்பட்டதாகும். முன்னைய வரைபுகள் மீதான குறிப்புகள் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களால் வழங்கப்பட்டது. அறிக்கை அயுத்யா கஜநாயக்கவினால் வடிவமாக்கப்பட்டது. தகவல்கள் மற்றும் உட்பார்வை என்பவற்றைப் பகிர்வதன் மூலம் ஆதரவளித்த அனைத்துத் தனிப்பட்டவர்களுக்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நன்றி உடையதாகவுள்ளது.

# பொருளடக்கம்


1. பின்னணி…………………………………………………………………….…...…4
2. இலங்கையில் அடையாளமயமானவழக்குகள் மீதான சுருக்கமான கண்ணோட்டம்…....…. 8
3. சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகள்……………………………………………...….11

   கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தம்…………………………………………….…11

   சட்ட ரீதியான சீர்திருத்தம்……………………………………………...…..16
4. முடிவுரை……………………………………………………………………...….22

பின்னிணைப்பு – I அடையாளமயமான பத்து வழக்குகளின் காலவொழுங்கும் விபரங்களும்…………………………………………………………….…..…23

## 1. பின்னணி

இந்த அறிக்கையில் கலந்துரையாடப்பட்ட வழக்குகள் இலங்கையில் குற்றவியல் நீதி முறைமையின் தவறுதல்கள் மற்றும் இயலாமைகள் என்பவற்றினை அடையாளப்படுத்துவனவாகும். நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பிலான பல்வகையான பின்னடைவுகள் மற்றும் தடைகளை அவை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்த வழக்குகள் பெரும்பாலானவற்றில், புலன்விசாரணை மற்றும் வழக்குத் தொடருதலிலான கட்டங்களில் நிலவிய ஒரு மந்தகதியிலான முன்னேற்றத்துடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நீதிக்காக காத்திருந்தனர். திருகோணமலை மாணவர்கள் ஐவரின் படுகொலை மற்றும் திரு. ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை (அறிக்கையில் பின்னதாக விபரமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது) போன்ற, முடிவடைந்த சில வழக்குகளில், குற்றஞ் சாட்டப்பட்டவர்/கள் அதிலிருந்து விடுவிக்கப்பட்டு மற்றும் விடுதலை செய்யப்பட்டமையானது நீதி பாதிக்கப்பட்டவர்களை கைவிட்டதைக் காண்பித்தது.

இந்தப் பின்னணியில், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் குறித்தான முன்னயை பற்றுறுதிகளை கைவிட்டு விடுவதற்கான தங்களது நோக்கத்தை தற்போதைய அரசாங்கம் தெளிவாக்கியது.[1] ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்ஒரு மைல்கல் தீர்மானமான, 30/1 இற்கு, 2015 இல் இலங்கை அரசாங்கம் இணையனுசரணை அளித்து, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கு அதன் பற்றுறுதியைத் தெரிவித்தது. இலங்கை இந்தப் பற்றுறுதிகளை 2017 மற்றும் 2019 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மேலும் இரண்டு தீர்மானங்களிலும் புதுப்பித்தது.

இந்தத் தீர்மானங்கள் ஊடாக, "மனித உரிமைகளின் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களின் குற்றச்சாட்டுகளை புலன்விசாரணை செய்வதற்கு ஒரு விசேட ஆலோசகருடன் ஒரு நீதிப்பொறிமுறையை" ஸ்தாபிப்பதற்கு இலங்கை பற்றுறுதியளித்துள்ளதுடன் "பொதுநலவாயம் மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகள், எதிர்தரப்புச் சட்டத்தரணிகள், அனுமதியளிக்கப்பட்ட வழக்குத் தொடருனர்கள் மற்றும் புலன்விசாரணையாளர்களின் விசேட ஆலோசனை அலுவலகம் உட்பட, இலங்கை நீதிப் பொறிமுறையில் ஒரு முக்கிய பங்குபற்றுதலை ஏற்றுக்கொண்டது.[2] எனினும் அத்தகையதொரு பொறிமுறை இலங்கையில் ஒரு போதும் ஸ்தாபிக்கப்படவில்லை என்பதுடன் அவ்வாறான ஒரு பொறிமுறை குறித்தான முன்னைய பற்றுறுதிகளையும் தற்போதைய அரசாங்கம் வெளிப்படையாகவே கைவிட்டுள்ளது.[3]

நவம்பர் 2019 இல், ஏற்பட்ட அரசாங்க மாற்றத்தை அடுத்து, யுத்தக் குற்றங்கள், மனித உரிமைகளின் மீறல்கள் மற்றும் கடுமையான குற்றவியல் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பில் அரசாங்கம் ஒரு மறுதலையான நிலைப்பாட்டில் இருந்தது. ஐ.நா தீர்மானம் மற்றும்

---

[1] இலங்கை அமைச்சரவை அலுவலகம், 2020-02-19 அன்று மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பான ஊடக மாநாடு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் 30/1 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுதல்'http://www.cabinetoffice.gov.lk/cab/ index.php?option=com_content&view=article&id=16&Itemid=49&lang=en&dID=10425>இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 14, 2020 அன்று அணுகப்பட்டது.

[2] சர்வதேச மன்னிப்பு சபை, 'இலங்கை: ஐ.நா பற்றுறுதிகளிலிருந்து விலகுதல் மனித உரிமைகள் சபையினால் வலுவான பதில் நடவடிக்கையைத் தேவைப்படுத்துகிறது' https://www.amnesty.org/en/latest/news/2020/02/sri-lanka-withdrawal-from-un-commitments-requires-robust-response-by-human-rights-council/எனும் இணையத் தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 14, 2020 அன்று அணுகப்பட்டது.

[3] ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர அலுவலகம், 'மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகரை வெளியுறவு அமைச்சர் சந்திக்கிறார்',<https://www.un.int/srilanka/news/foreign-relations-minister-meets-un-high-commissioner-human-rights>எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 14, 2020 அன்று அணுகப்பட்டது.

அதற்கமைவாக தீர்மானத்தின் பற்றுறுதிகளிற்கு இணை அனுசரணை வழங்குவதிலிருந்து விலகும் அதன் நோக்கத்தை புதிய அரசாங்கம் அறிவித்ததுடன், "அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பிற்கமைவாக, இருக்கின்ற பொறிமுறைகளின் பொருத்தமான மறுசீரமைத்தல் உட்பட, உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நிறைவேற்று முறையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செய்முறை என்பவை உள்ளடங்கியதான ஒரு நிலைபேறான சமாதானத்தை அடைதல்" மீதான அதன் பற்றுறுதியைத் தெரிவித்தது. "முன்னைய இலங்கை விசாரணை ஆணைக்குழுக்களினால் புலன்விசாரணை செய்யப்பட்ட மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பவற்றின் மீறல்கள் தொடர்பான அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும், அவற்றின் பரிந்துரைகளின் அமுல்படுத்தல் தொடர்பான தன்மைகளை மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் அரசாங்கத்தின் கொள்கையுடன் இணங்கும் வகையில் அவற்றை அமுல்படுத்துவதற்கு ஏற்கத்தக்கதான முறைமைகளை முன்மொழிவதற்கும்[4], ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியால் தலைமை வகிக்கப்படும் ஒரு விசாரணை ஆணைக்குழுவின் நியமனத்தை இது கொண்டிருக்கலாம்"[5] என்பது குறிப்பிடப்பட்டது.

இலங்கையின் விசாரணை ஆணைக்குழுக்களுடனான முன்னைய அனுபவங்கள்,ஆணைக் குழுக்கள் பயனுறுதியான நிலைபேறான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செய்முறைகளை வழங்குவதிலிருந்து மிகவும் அப்பாற்பட்டிருப்பதையும், எதிர்தரப்புகளுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அல்லது 'மனித உரிமைகள் மீறல்களில் அரசு சம்பந்தப்படுதல்களிற்கான அதிகளவு சான்றுகளுக்கு முகங் கொடுக்கும் போது விமர்சனங்களைத் திசை திருப்புவதற்கு கருவிகளாக உபயோகிக்கப்பட்டதையுமே' எடுத்துக் காட்டின.[6] அத்தோடு

[4]இலங்கை அமைச்சரவை அலுவலகம், 2020-02-19 அன்று மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பான ஊடக மாநாடு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் 30/1 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுதல்'http://www.cabinetoffice.gov.lk/cab/ index.php?option=com_content&view=article&id=16&Itemid=49&lang=en&dID=10425>இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 14, 2020 அன்று அணுகப்பட்டது.;இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான இலக்குகளை அடைவதற்கு இலங்கை பற்றுறுதி கொண்டுள்ளது - அமைச்சர் குணவர்த்தன'http://www.defence.lk/Article/view_article/894இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், நவம்பர் 14, 2020 அன்று அணுகப்பட்டது.

[5]தற்போது, புதிய விசாரணை ஆணைக்குழுவிற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளதுடன், ஊடக அறிக்கைகளின் படி, ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (யு.என்.எச்.சி.ஆர்) இலங்கை தொடர்பான விடயத்தை விவாதத்திற்கு எடுப்பதற்கு சில நாட்களுக்கு முன், இது தொடர்பான ஓர் அறிவித்தல் ஒரு வாரத்திற்குள் எதிர்பார்க்கப்படுகிறது. கொவிட் - 19 முன்னுரிமைகள், பாராளுமன்றக் கலைப்பு, தேர்தல்கள் மற்றும் ஒரு புதிய அமைச்சரவையின் உருவாக்கம் என்பவற்றுக்கு கட்டமைப்பை ஏற்படுத்துவதில் நிலவிய ஏறத்தாழ ஒரு வருட காலத் தாமதத்திற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் காரணம் தெரிவித்தார். சண்டே டைம்ஸ், 'மனித உரிமைகள் குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு ஒரு புதிய விசாரணை ஆணைக்குழு',<http://www. sunday times.lk/210117/news/a-new-commission-of-inquiry-to-study-human-rights-allegations-429116.html>
இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும், ஜனவரி 17, 2021 அன்று அணுகப்பட்டது.

[6] கிறவுண்ட்வியூஸ், 'விசாரணை ஆணைக்குழுக்களுடன் இலங்கையின் பிரச்சினையான கடந்தகாலம்: நாங்கள் மீளவும் தவறிழைக்கின்றோமா?'<https://groundviews.org/2018/03/19/sri-lankas-problematic-past-with-commissions-of-inquiry-are-we-repeating-mistakes/>எனும் இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.; மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், '2006-2012 காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் விசாரணைக் குழுக்களின் ஒரு பட்டியல்'
<https://www.cpalanka.org/a-list-of-commissions-of-inquiry-and-committees-appointed-by-the-government-of-sri-lanka-2006-2012/>இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

.

அவைகள் குற்றவியல் புலன்விசாரணைகளில் தாமதங்களை ஏற்படுத்தின, சான்றுகளில் குளறுபடிகளை ஏற்படுத்தி விசாரணைச் செய்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களின் பங்குபற்றுதலுக்கு எதிரான விரோதப்போக்கை ஏற்படுத்தின. மேலும் ஏதேனும் பிற்தொடர்ச்சியான நடவடிக்கைகள் பற்றியோ அல்லது மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் ஏனைய கடுமையான குற்றங்களைப் புலன்விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட அநேகமான விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளின் அமுல்படுத்தல் தொடர்பாகவோ பொது வெளியில் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களே உள்ளன.[7]

பொறுப்புக்கூறல் குறித்தான முன்னயை பற்றுறுதிகள் கைவிடப்பட்டதோடு, மோதல் காலங்களில் பாரிய மனித உரிமை மீறல்களில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டவர்களுக்கு விடுதலைகள் அல்லது ஜனாதிபதியின் பொது மன்னிப்பு போன்ற வடிவங்களில் பின்னடைவுகளும் அங்கே அண்மையில் ஏற்பட்டன.[8] இதற்கு மேலதிகமாக, வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதை தொடராதிருப்பதற்கும், மிக அண்மையில் திரு. ஜோசப் பரராஜசிங்கம் அவர்களது படுகொலை போன்ற சில வழக்குகளில் எதிராளி மீதான குற்றச்சாட்டுகளை கைவிடுவதற்கும் சட்டமா அதிபர் தீர்மானித்தார்.[9] சட்டமா அதிபரினால், குறிப்பாக குற்றவியல் விடயங்கள் தொடர்பாக பரவலான அதிகாரம் அப்பியாசிக்கப்படுவதின் பிரச்சினையான தன்மையை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) முன்னரே சுட்டிக்காட்டியுள்ளது.[10] இந்த வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர்களை அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்டவர்களாக காண்பிக்கும் முனைப்புகள் பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நாடுவதற்கான முயற்சிகளை மேலும் தடை செய்தன.[11] குற்றவியல் நீதி முறைமையில் நிர்வாகத்துறையின் அத்தகைய தலையீடு சட்டவாட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றை அநேகம் செல்லரித்துப் போகச் செய்யும்.[12]

இவ்வாறான நிகழ்வுகளின் பின்னணியில், தற்போது இலங்கையின் குற்றவியல் நீதி முறைமை ஊடாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் தொடரும் தடைகளை இந்த அறிக்கை சுருக்கமாக ஆராய்கின்றதுடன் கட்டமைப்பு மற்றும் சட்ட ரீதியான சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளையும் மேற்கொள்கிறது. கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் பெரிதும் புலன்விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடுத்தல் மீது கவனம் செலுத்துகிறது, ஆனாலும் நீதித்துறையினுள் சீர்திருத்தங்களும் முக்கியமானவை என்பதை அங்கீகரிக்கின்றது. சட்டச்

---

[7] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கை அரசாங்கத்தால் (2006-2013) நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் மற்றும் விசாரணைக்குழுக்களின் ஒரு பட்டியல்,<https://www.cpalanka.org/a-list-of-commissions-and-committees-appointed-by-gosl-2006-2013/>இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும், நவம்பர் 16, 2020 அன்று அணுகப்பட்டது.

[8] கிறவுண்ட்வியூஸ், 'திருகோணமலை 5 மாணவர்களுக்கான நீதி மறுக்கப்பட்டது', https://groundviews.org/2019/07/08/justice-denied-for-trinco-5/ இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், நவம்பர் 20, 2020 அன்று அணுகப்பட்டது.; மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'மிருசுவில் படுகொலையிலான மன்னிப்பு: நீதிக்காக இலங்கையின் வழுவல் தேடல்',< https://www.cpalanka.org/the-pardon-in-the-mirusuvil-massacre-sri-lankas-elusive-quest-for-justice/>இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 20, 2020 அன்று அணுகப்பட்டது.

[9] சர்வதேச நீதியாளர்களின் ஆணையகம் (ICJ), 'இலங்கை: பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அரசின் தவறுதலுக்கு அடையாளமயமான குற்ற விடுவித்தல்' ,<https://www.icj.org/sri-lanka-acquittal-emblematic-of-the-states-failure-to-ensure-accountability/>இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

[10] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கையில் சட்டமா அதிபர் திணைக்களத்தை மீள்பரிசீலித்தல்: மறுசீரமைத்தலுக்கான கருத்துகள்',https://www.cpalanka.org/rethinking-the-attorney-generals-department-in-sri-lanka-ideas-for-reform/எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 23, 2020 அன்று அணுகப்பட்டது.

[11] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்டமா அதிபர், உயர் நீதிமன்ற அடிப்படை உரிமை மனு 32/2020 https://www.cpalanka.org/centre-for-policy-alternatives-v-attorney-general-sc-fr-32-2020/

[12] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'சுனில் ரத்நாயக்கவிற்கு பொது மன்னிப்பளிக்கும் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தும் அடிப்படை உரிமை மனுக்கள்',<https://www.cpalanka.org/fundamental-rights-applications-challenging-the-decision-to-pardon-sunil-ratnayake/>இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், நவம்பர் 23, 2020 அன்று அணுகப்பட்டது.

சீர்திருத்தங்கள் தெரிவு செய்யப்பட்ட ஒரு சில சட்டங்களுக்காக தெரிவிக்கப்படுகின்றன. தற்போதைய அறிக்கை மா.கொ.நி ஆல் முன்னைய அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தத்திற்கான பரந்த முன்மொழிவுகளை விரிவுபடுத்தி, அப்பதிப்பில் எழுப்பப்பட்ட கரிசனங்களை மீளாராய்கிறது.[13]

[13] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கையின் குற்றவியல் நீதிமுறைமையில் பொறுப்புக்கூறலுக்கான தேவை: ஏழு அடையாளமயமான வழக்குகள் மீதான ஒரு பார்வை'<https://www.cpalanka.org/the-need-for-accountability-in-sri-lankas-criminal-justice-system/>எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், நவம்பர் 23, 2020 அன்று அணுகப்பட்டது.

## 2. இலங்கையில் அடையாளமயமான வழக்குகள் மீது சுருக்கமான கண்ணோட்டம்

இலங்கையில் குற்றவியல் நீதி முறைமை மூலம் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை அடைவதில் உள்ள தாமதங்கள் மற்றும் பின்னடைவுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு அடையாளமயமான பத்து வழக்குகளை இவ்வறிக்கை மதிப்பீடு செய்கிறது. மா.கொ.நி இனாலான முந்தைய அறிக்கை இவ்வாறான பல எண்ணிக்கையிலான வழக்குகளின் புலன்விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளை ஆராய்கின்றது, தற்போதைய இவ்வறிக்கை மிகவும் அண்மையிலேற்பட்ட மாற்றங்களை ஆராயும், அதன் முன்னைய அறிக்கையொன்றின் தொடர்ச்சியாக செயற்படுகின்றது.

இலங்கையில் குற்றவியல் நீதி முறைமையில் சீர்திருத்தத்தின் தேவையை எடுத்துக் காட்டும் அடையாளம் கொண்ட பல எண்ணிக்கையிலான வழக்குகளை மா.கொ.நி ஆராய்ந்து நீதியைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் மற்றும் பின்னடைவுகளின் வேறுபட்ட தன்மைகளை உள்ளடக்கியதான பத்து வழக்குகளை இந்த அறிக்கைக்காகத் தெரிவு செய்தது. தெரிவு செய்யப்பட்ட இந்த வழக்குகள் வெவ்வேறு கால கட்டங்கள் மற்றும் புவியியல் பிரதேசங்கள், பாதிக்கப்பட்டவர் விபரங்கள், மற்றும் புலன்விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடுத்தலிலான வெவ்வேறு நிலைகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன.[14]

அறிக்கையின் இந்தப் பகுதி, தெரிவு செய்யப்பட்ட வழக்குகளின் ஒரு சுருக்கமான கண்ணோட்டத்தைத் தருகின்றது. இந்த வழக்குகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு, பகிரங்கமாக கிடைக்கப்பெறும் தகவலின் அடிப்படையில் ஒவ்வொரு வழக்குக்குமான கால அட்டவணை மற்றும் விபரங்கள் என்பவற்றை பின்னிணைப்பு I இல் பார்க்கவும்.[15]

### 1. ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் கொலை, 2005

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் படுகொலை வழக்கு புலன்விசாரணை மற்றும் வழக்கு நடவடிக்கைகளில் நீண்ட கால தாமதங்களுக்கு முகங்கொடுத்தன. மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றவொப்புதல் வாக்குமூலத்தை சான்றாக அனுமதிக்க முடியாதென தீர்மானித்த போது, சட்டமா அதிபர் வழக்கு நடவடிக்கையை தொடராது இடைநிறுத்துவதற்குத் தீர்மானித்ததினால், குற்றஞ்சாட்டப்பட்டவர் இறுதியாக 2021 இல் விடுவிக்கப்பட்டார்.[16]

### 2. 'திருகோணமலை ஐவர்': திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐவரின் படுகொலை, 2006

ஜனவரி 2, 2006 அன்று படுகொலை செய்யப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்கள் தொடர்பான இந்த வழக்கில் புலன்விசாரணை மற்றும் வழக்கு நடவடிக்கைகளிலான ஒரு மிக நீண்ட கால தாமதத்தின் பின், குற்றஞ் சாட்டப்பட்ட அனைத்து 13 நபர்களும் போதிய சாட்சியங்களின்மையால் விடுதலை செய்யப்பட்டனர். உயிர் தப்பியவர்கள் மற்றும் சாட்சியங்களுக்கு எதிராக கடுமையான அச்சுறுத்தல்களால் இந்த வழக்கு நீண்ட காலத்திற்கு குறிக்கப்பட்டதுடன், அவை பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நாட்டை விட்டுத்தப்பியோடுவதற்கும் நிர்ப்பந்தித்தது.[17]

---

[14] இலங்கையில் அடையாளப்படுத்தக்கூடிய பல வழக்குகள் ஒவ்வொன்றும் நாட்டில் நீதியுடன் பல சவால்களை எதிர்கொள்கின்ற, குற்றவியல் நீதி முறைமையில் நீதி தவறிய, மற்றும் நிலவும் குற்ற விலக்களிப்பு என்பவற்றுக்கான ஒரு குறிக்காட்டியாக உள்ளன, என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

[15] பொது வெளியில் வழக்குகள் தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களே உள்ளன என்பதுடன், வழக்குகளின் தன்மை, அதே போன்று அவை நடைபெற்றதிலிருந்து கணிசமான காலம் கடந்த தன்மை என்பன தகவல்களைப் பெற்றுக் கொள்வதை சவாலுக்குட்படுத்தின.

[16] எக்னோமி நெக்ஸ்ட், 'மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்மானம் காரணமாக பிள்ளையான் விடுதலை செய்யப்பட்டார்', <https://economynext.com/pillayan-released-due-to-ca-decision-lawyer-77804/> எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

[17] மனித உரிமைகள் கண்காணிப்பகம், 'இலங்கை: திருகோணமலை 5 இற்கு நீதி இல்லை', https://www.hrw.org /news/2019/07/08/sri-lanka-no-justice-trinco-5 எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், டிசம்பர் 15, 2020 அன்று அணுகப்பட்டது.

## 3. அக்ஷன் பாம் (ACF) தன்னார்வப் பணியாளர்களின் படுகொலை, 2006

உத்தரவாதங்கள் திரும்பத் திரும்ப வழங்கப்பட்ட போதிலும், ஆகஸ்ட் 4, 2006 அன்று மூதூரில் 17 தன்னார்வப் பணியாளர்களின் படுகொலைகளிற்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் கொண்டு வருவதில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தவறின. புலன்விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபர் பொலிசாரிற்கு கட்டளையிட்டுள்ளதாக குறிப்பிட்டு 2019 இலிருந்து ஊடகங்கள் அறிவிக்கின்றன, ஆனாலும் புலன்விசாரணையின் முன்னேற்றம் தொடர்பாக மேலதிக தகவல் எதுவும் பகிரங்கமாக கிடைப்பதற்கில்லை.

## 4. கீத் நொயரின் ஆட்கடத்தல், 2008

பத்திரிகையாளர் கீத் நொயர் அவர்களின் ஆட்கடத்தல் சம்பவம் புலன்விசாரணைகளிலான நீண்ட கால தாமதங்களினால் குறிக்கப்பட்டது. முக்கியமான சாட்சிகள் மற்றும் சந்தேக நபர்களை அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்டவர்களாக காண்பிப்பதற்கு அண்மைக்காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 5. காணாமற் போன பதினொருவர்: 11 இளைஞர்களின் ஆட்கடத்தல், 2008/09

ஆகஸ்ட் 25, 2008 மற்றும் மார்ச் 21, 2009 இற்கிடையில் கொட்டாஞ்சேனை மற்றும் புறநகர்ப் பகுதிகளிலிருந்து 11 இளைஞர்களின் ஆட்கடத்தலில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிற்கு எதிரான வழக்கு, ஒரு தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட நீண்ட புலன்விசாரணைகளின் பின்,2020 இல் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் முன்னைய நிர்வாகத்தின் கீழ் (2015-2019) அரச சேவகர்களின் மீது சுமத்தப்பட்ட அரசியல் பழிவாங்கல்களை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான முயற்சிகள் காரணமாக வழக்கு முன்னேற்றம் காணுமா என்ற கவலைகள் அங்கே ஏற்பட்டுள்ளன. இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப் பட்டுவிட்டதாயினும் அதன் கண்டறிதல்கள் தொடர்பாக எந்தத் தகவல்களும் இல்லை.[18]

## 6. லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை, 2009

இது, ஒரு தசாப்தத்திற்கு மேலாக, புலன்விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடருதல் நடவடிக்கைகளில் நீண்ட கால தாமதத்துடன், நீதியும், பொறுப்புக்கூறலும் வழுகி நிற்கும் மற்றொரு வழக்காகும். உள்நாட்டு கட்டமைப்புகளினாலான நீதியை வழங்குவதற்கு நேர்மையான நடவடிக்கையின்மை அவரது குடும்பம் படுகொலையை ஆராய்வதில் அதன் உதவியை நாடி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் ஒரு முறைப்பாட்டை பதிவு செய்ய வைத்தது.[19]

## 7. பிரகீத் எக்னலிகொடவின் காணமற்போதல், 2010

பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் காணமற்போதல் தொடர்பான புலன்விசாரணைகள் சான்றுகளைத் தடுத்து வைக்கும் முயற்சிகள் காரணமாக தாமதப்படுத்தப்பட்டும் மற்றும் கவனமளிக்கப்படாது அலட்சியமாகவும் விடப்பட்டுள்ளன. இந்த வழக்கும் கூட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களின் அச்சுறுத்தப்படுதல் குற்ற விலக்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றமைக்காக குறிப்பிடப்படுகிறது.

---

[18]நியூஸ் பெர்ஸ்ட், ‘அரசியல் பழிவாங்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது’, <https://www.newsfirst.lk/2020/12/08/final-report-by-pcoi-on-political-victimization-handed-over-to-president/> எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

[19]குளோப் அன்ட் மெயில், ‘படுகொலை செய்யப்பட்ட இலங்கைப் பத்திரிகையாளரின் புதல்வி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாட்டைத் தாக்கல் செய்கிறார்’, <https://www.theglobeandmail.com/world/article-daughter-of-slain-sri-lankan-journalist-files-complaint-with-un-rights/> என்ற இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

## 8. வசீம் தஜூடீனின் கொலை, 2012

ரகர் விளையாட்டு வீரரான தஜூடீனின் இறப்பை ஒரு விபத்தாகச் சித்தரிக்க முயன்ற ஆரம்ப முயற்சிகளின் பின்னர், அதனை மறைத்தொதுக்க முயன்றவர்கள் ஈற்றில் 2019 இல் குற்றஞ் சுமத்தப்பட்டனர். இக்கொலையில் சம்பந்தப்பட்டவர்களை அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்டவர்களாக சித்தரிக்க முயலும் அண்மைய முயற்சிகள் இந்த வழக்கில் பொறுப்புக்கூறலின் பயனுறும் தன்மையின் சாத்தியம் குறித்தான கரிசனங்களை எழுப்பியுள்ளன.

## 9. வெலிக்கடை சிறைச்சாலைச் சம்பவம், 2012

சில அடையாளம் காணப்பட்ட கைதிகளை உயிரோடு இல்லாமலிருக்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையென பின்னர் வெளிச்சத்திற்கு வந்த இச்சம்பவத்தில், 27 கைதிகள் கொல்லப்பட்டும் 43 கைதிகள் காயமுமடைந்தனர். இந்த வழக்கும் கூட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்கள் அதிகளவான அச்சுறுத்தல்களுக்குள்ளானதாகவும் மற்றும், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்டவர்களாக சித்தரிக்கப்படும் முயற்சிகளுக்காகவும் குறிப்பிடப்படுகிறது.

## 10. ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவம், 2013

புலன்விசாரணைகளிலான தாமதங்களின் பின்னர், ஓர் அமைதியான ஆர்ப்பாட்டத்தின் போது நிராயுதபாணிகளாக நின்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த இந்த வழக்கில் குற்றப்பகர்வு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கும் கூட சாட்சிகள் அச்சுறுத்தப் பட்டமைக்காகக் குறிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட இந்த வழக்குகள் புலன்விசாரணையிலான நீண்ட தாமதங்கள், குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்வதிலான தாமதங்கள் அவ்வாறே வழக்குத் தொடருதலிலுமான தாமதங்களைக் காண்பித்தன. பல்வேறு சந்தர்ப்பங்களில் அக்கறை முரண்பாட்டுக் குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றதுடன் வழக்கின் உண்மையான தகுதிகளைக் கவனத்தில் கொள்ளாது புறம்பான காரணங்களுக்காக குற்றச்சாட்டுகள் கைவிடப்படுகின்ற பல சம்பவங்கள் அங்கே காணப்பட்டன.[20] அத்தோடு அவை பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புப் பொறிமுறையில் பாரிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டின. பொறுப்புக்கூறல் பல தடைகளை பல வருடங்கள், சில சமயங்களில் தசாப்தங்களுக்கும் முகங் கொடுக்குமென இந்த வழக்குகள் அனைத்தும் காண்பித்தன. இவ்வாறான பின்னடைவுகள் மற்றும் இலங்கை நீதிமன்றங்களில் நீதியின் வெற்றிக்கு மட்டுப்படுத்தப்பட்ட சாத்தியங்களுடன், பாதிப்படைந்தவர்கள் பலரும் தங்கள் வாழ்நாளின் போது நீதி வழங்கப்படுவதைக் காணமாட்டார்கள் என்ற பயம் உள்ளது.

---

[20]டெய்லி பைனான்சியல் டைம்ஸ், ‘இலங்கையை பாதுகாக்கும் சட்ட மா அதிபரின் வகிபாகம் மீள்பார்வையிடப்படல் வேண்டும்: வழக்கறிஞர்கள்’http://www.ft.lk/News/attorney-generals-role-in-defending-sri-lanka-must-be-revisited-lawyers/56-476705 எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், நவம்பர் 25, 2020 அன்று அணுகப்பட்டது.; சர்வதேச நீதியாளர்கள் ஆணையகம், ‘இலங்கை: பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அரசின் தவறுதலுக்கு அடையாளமான குற்றவிடுவித்தல்’, <https://www.icj.org/sri-lanka-acquittal-emblematic-of-the-states-failure-to-ensure-accountability/>இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

## 3. சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகள்

இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு மற்றும் சட்ட ரீதியான சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகள் தெரிவு செய்யப்பட்ட வழக்குகளிலான தாமதங்கள் மற்றும் பின்னடைவுகளை அடிப்படையாகக் கொண்டவை. இங்கே மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முற்றிலும் முழுமையானவையல்ல ஆனாலும் இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையினுள் பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சீர்திருத்தங்களின் ஒரு சுட்டிக் காட்டுதல் மட்டுமேயாகும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

### கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தம்

*வழக்குத் தொடருனர்கள்/சட்டமா அதிபர் திணைக்களம்*

ஒரு சந்தேக நபர் தொடர்பாக யாரேனும் ஆட்களுக்கு எதிராக குற்றப்பகர்வுகளை அளிப்பதா அல்லது இல்லையா எனவும் மற்றும் ஒரு மேல் நீதிமன்றில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடர்வதை இடைநிறுத்துவதைத் (வழக்கைக் கைவிட உடன்படல்) தீர்மானிப்பதற்குமான தனித் தற்றுணிபை சட்டமா அதிபர் கொண்டுள்ளார். [21]அத்தோடு, நீதிமன்றங்கள் முன்பாகவும் அவ்வாறே பல்வேறு சர்வதேச நீதிச் சபைகளில் அரசை ஆதரித்து வாதாடிப் பாதுகாப்பதற்கும் மற்றும் அரசிற்கு அறிவுறுத்துவதற்குமான ஒரு வகிபாகமும் சட்டமா அதிபரிற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த முரண்பட்ட வகிபாகங்கள், விசேடமாக அரச செயற்பாட்டாளர்கள் சந்தேகநபர்களாக உள்ள பாரிய மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் போன்றவற்றில், ஒரு அக்கறை முரண்பாட்டுக்கு இட்டுச்செல்கின்றது.[22]

சர்வதேச குற்றவியல் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் போன்ற விடயப் பரப்புகளில் செயற்றிறன் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவமின்மை மற்றும் அதே போன்று இவ்வலுவலகத்தின்[23] அரசியல் மயமாக்கல் மற்றும் சுயாதீனமின்மை என்பன வழக்குத் தொடரும் நடவடிக்கைகளை[24] சட்டமா அதிபர் பயனுறுதியான வகையில் மேற்கொள்ளும் இயலுமைகள் மீது சந்தேகம் எழுப்புகிறது. மேலும், திணைக்களத்தில் பாரிய வேலைப்பளு காரணமாக வழக்குத் தொடர்தல் நடவடிக்கைகளில் தாமதங்களை சட்டமா அதிபர் திணைக்களமே சுட்டிக்காட்டியுள்ளது.[25]

1994 ஆம் ஆண்டு மேல், தென் மற்றும் சப்பிரகமுவ மாகாணங்கள் காணமற் போதல்கள் ஆணைக்குழு மற்றும் 1998 ஆம் ஆண்டின் இலங்கை முழுவதிலும் காணமற்போதல்கள் தொடர்பான ஆணைக்குழு ஆகிய இரண்டும் வழக்குத் தொடருதல் தொடர்பில் பெரும்

---

[21]1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டத்தின் பிரிவு 12 மற்றும் 135.

[22]டெய்லி பைனான்சியல் டைம்ஸ், 'இலங்கையை பாதுகாக்கும் சட்ட மா அதிபரின் வகிபாகம் மீள்பார்வையிடப்படல் வேண்டும்: வழக்கறிஞர்கள்' http://www.ft.lk/News/attorney-generals-role-in-defending-sri-lanka-must-be-revisited-lawyers/56-476705 எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், நவம்பர் 25, 2020 அன்று அணுகப்பட்டது.; காணமற் போன ஆட்களுக்கான அலுவலகம், 'இடைக்கால அறிக்கை' (ஆகஸ்ட் 2018) http://www.jdslanka.org/images/documents/disappearances_executions/the_office_on_missing_persons_interim_report_2018_august.pdf எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 25, 2020 அன்ற அணுகப்பட்டது, பந்தி 30 இல்.

[23]ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, 'இலங்கை மீதான மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலக விசாரணை அறிக்கை' https://www.ohchr.org/EN/HRBodies/HRC/Pages/OISL.aspx எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கும், நவம்பர் 26, 2020 அன்று அணுகப்பட்டது. பக்கங்கள் 233, 96, 104, 235 ஐ பார்க்கவும்.

[24]இஸபெல்லா லஸ்ஸீ (பதிப்பாளர்), இலங்கையின் முயற்சிப்பதற்கான நேரம்: மோதல் தொடர்பான துஷ்பிரயோகங்களின் வழக்குத் தொடருதல்' (1 ஆம் பதிப்பு, சட்ட கற்கைகளுக்கான தெற்காசிய நிலையம் 2019).

[25]சட்ட மா அதிபரினால் துறைசார் குழுவிற்கான சமர்ப்பணங்கள்; நியூஸ் பெர்ஸ்ட்'லசந்த விக்கிரமதுங்க கொலை வழக்கு பிற்போடப்பட்டது', https://www.newsfirst.lk/2020/12/04/_lasantha-wickrematunge-homicide-cases-postponed/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 12, 2020 அன்று அணுகப்பட்டது.

பாரதூரமான சுயாதீனமின்மையைச் சுட்டிக்காட்டி 'சுயாதீனமான வழக்குத்தொடருனர் அலுவலகம்' ஒன்றுக்கு பரிந்துரையை மேற்கொண்டன.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் பேரவை தீர்மானங்கள் கூட யுத்தக் குற்றங்கள் மற்றும் பாரிய மனித உரிமைகள் மீறல்களில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு விசேட ஆலோசகரின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, வழக்குத் தொடருதல்களை முன்னெடுப்பதற்கும் மற்றும் மேற்கொள்வதற்கும் ஒரு சுயாதீனமான விசேட வழக்குத் தொடருனர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு ஏனைய பல்வேறு சுயாதீன அமைப்புகள் மற்றும் அண்மைய ஆய்வுகள் பரிந்துரைத்துள்ளன.[26]

நம்பகத்தன்மையான மற்றும் பக்கச்சார்பற்ற புலன்விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடருதல், அதே போன்று வழக்குத் தொடருதல் செய்முறை சீர்திருத்தத்திற்கான உடனடி நடவடிக்கை போன்றவற்றுக்காக சட்டமா அதிபரின் அலுவலகத்தினுள் ஒரு சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகத்தினை (IPP Office) ஸ்தாபிப்பதற்கு மா.கொ.நி ஆல் வெளியிடப்பட்ட முன்னைய அறிக்கை பரிந்துரைக்கிறது.[27] முன்னைய அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட அப்பரிந்துரைகளை தற்போதைய இந்த அறிக்கை வலியுறுத்துகிறது. பின்வருபவை, ஒரு சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகத்திற்கான ஒரு சாத்தியம் கொண்ட சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான வடிவமைப்பிற்கான பல்வேறு பரிந்துரைகளின் சுருக்கமாகும்.

1. சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகம், பணிப்பாளர் மற்றும் பணியாள் உறுப்பினர்களின் ஒரு தொகுதியை அலுவலகத்திற்கு கொண்டிருப்பதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது. இது தனது ஆணையை அடைவதற்கு, அதன் தலைமை அலுவலகத்தை கொழும்பில் கொண்டும், மற்றும் அவசியமானவாறு பிரதேச அலுவலகங்களைக் கொண்டுமிருக்கலாம்.

2.அலுவலகத்தின் பணிப்பாளர் பாராளுமன்ற மேற்பார்வையுடன் ஒரு வெளிப்படையான நடைமுறையூடாக ஜனாதிபதியால் நியமிக்கப்படலாம்.[28]

3.ஏனைய பொதுநலவாய சட்ட முறைகளில் அத்தகைய ஒரு பதவி நிலைக்கான தேவைப்பாடுகள் மீது கவனம் செலுத்துகையில், பணிப்பாளர் 10 வருடங்களுக்கும் குறையாது ஒரு சட்டத் தொழிலை அப்பியாசிக்கின்றவராக மற்றும் உண்மை கண்டறிதல் அல்லது புலன்விசாரணை செய்தல், மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பவற்றில் முன்னனுபவம், அலுவலகத்தின் பணிகளை மேற்கொள்வதில் சம்பந்தப்பட்ட ஏனைய தகுதிகளையோ கொண்டவராக இருத்தல் வேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகின்றது.

---

[26]இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை முன்னேற்றுதல் தொடர்பாக ஒக்டோபர் 1, 2015 அன்று மனித உரிமைகள் பேரவையால் ஏற்று, அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் 30/1 இனால் பரிந்துரைக்கப்பட்டது, இலங்கை மீதான மனித உரிமைகள் ஆணையக அலுவலக விசாரணை அறிக்கை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை, சர்வதேசப் பிரமுகர்களின் சுயாதீனமான ஆணைக்குழுவின் (IIGP) இறுதி அறிக்கை அதே போன்று மா.கொ.நி இன் அண்மைய அறிக்கை. 'இலங்கையில் சட்ட மா அதிபரின் திணைக்களத்தை மீள்கருத்தில் கொள்தல்: மறுசீராக்கத்திற்கான யோசனைகள்' https://www.cpalanka.org/rethinking-the-attorney-generals-department-in-sri-lanka-ideas-for-reform/ இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும்.

[27]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் பொறுப்புக்கூறலின் அவசியம்: ஏழு அடையாளமயமான வழக்குகள் மீதான பார்வை', <https://www.cpalanka.org/the-need-for-accountability-in-sri-lankas-criminal-justice-system/> எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 20, 2020 அன்று அணுகப்பட்டது.

[28]சட்டம் மற்றும் ஒழுங்கு திணைக்களங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மீது பாராளுமன்ற மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கு மா.கொ.நி தொடர்ச்சியாகப் பரிந்துரைத்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட 'இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் பொறுப்புக்கூறலின் அவசியம்: ஏழு அடையாளமயமான வழக்குகள் மீதான பார்வை', என்பதைப் பார்க்கவும்.

4.பணிப்பாளரின் பதவிக் காலம் 5 வருடங்களுக்கு மேற்படாதிருப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது, ஆனாலும் அவர் பாராளுமன்ற அனுமதியுடன் மீள் நியமிக்கப்படுவதற்கு தகுதியானவராவர்.

5.அலுவலகத்திற்கு நியமனங்களை மேற்கொள்ளும் போது, அலுவலகப் பணியாளர்கள் பால்நிலை உட்பட, இலங்கையின் பன்மைத்துவ சமூகத் தன்மையைப் பிரதிபலிப்பதற்கும் மற்றும் அலுவலகத்தின் பணியாளர்கள் நேர்மையானவர்களாகவும் மற்றும் அலுவலகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலான அனுபவம் மற்றும் தகுதிகளைக் கொண்டிருப்பதையும் உறுதி செய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

6.அக்கறை முரண்பாடுகள் அங்கில்லாதிருப்பதை உறுதி செய்யும் முகமாக, சட்டத் தொழிலை அப்பியாசிப்பவர்களாக பணிப்பாளர் மற்றும் அலுவலகத்தின் பணியாளர்கள் அவர்கள் அலுவலகத்தின் கடமைகளுக்குப் புறம்பாக ஒரு சட்டத்தொழில் செய்பவராக அல்லது அவர்களது அலுவலகத்தின் கடமைகளுக்குப் புறம்பாக கொடுப்பனவுடன் கூடியதான ஒரு தொழிலில் ஈடுபடுதல் கூடாது.

7.இவ்வலுவலகத்திற்கான பணியாளர்களின் நியமனங்களை மேற்கொள்ளும் போது, ஓர் உத்தியோகபூர்வ பதவி நிலையில் அல்லது வேறு ஏதேனும் நலன் முரண்பாட்டுடன் அரசாங்கத்தினைப் பிரதிநிதிப்படுத்தி, மோதல் தொடர்பான குற்றங்களின் பொறுப்புக்கூறலுக்கு எதிராக ஓர் அபிப்பிராயத்தினை பகிரங்கமாக தெரிவித்தவர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுதல் கூடாது.

8.பாதிக்கப்பட்டவர்கள் அலுவலகத்தைப் பொறுப்புக்கூறத்தக்கதாக வைத்திருப்பதை உறுதி செய்வதற்கு, ஒரு குறிப்பிட்ட வழக்கில் குற்றஞ் சாட்டாதிருப்பதற்கு, அனைத்து வழக்கு நடவடிக்கைகளையும் தொடராதிருப்பதற்கு அல்லது வேறுவகையில் முடிவுறுத்துவதற்கான அலுவலகத்தின் தீர்மானத்தை ஒரு மீளாய்வு செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

*புலன்விசாரணையாளர்கள்*

குற்றங்களின் புலன்விசாரணை தொடர்பான சட்டம் மற்றும் புலன்விசாரணை உத்தியோகத்தர்கள் அதிகாரம் என்பன குற்றவியல் நடைமுறைக் கோவையின் அத்தியாயம் XI இல், பகுதி V இல் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வத்தியாயம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகிய இரு சாராருக்கும் அளிக்கப்பட்டுள்ள புலன்விசாரணை அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. இதைத் தவிர, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் புலன்விசாரணைகளில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பரந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு சந்தர்ப்பங்களில், பொலிசாரினால் வழங்கப்பட்ட சான்றுகளின் போதாமை காரணமாக குற்றத்திலிருந்து விடுவிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.[29] சான்றுகளை அழித்தல் அல்லது மோசடி செய்தல் தொடர்பான குற்றச்சாட்டுகளும் கூட அங்கேயுள்ளன. [30]புலன்விசாரணை உத்தியோகத்தர்களின் சுயாதீனம் மற்றும் புலன்விசாரணைகளில் அரசியல் தலையீடு தொடர்பான கரிசனைகளும் எழுப்பப்பட்டன. [31]மேலதிகமாக, புலன்விசாரணைச் செய்முறைகளிலான தாமதங்கள் வழக்குத் தொடருதல் நடவடிக்கைகளில் அதன் பயனான கால தாமதங்கள் மற்றும் பல வழக்குகளில் தீர்ப்பளித்தல்களையும் ஏற்படுத்தின.

---

[29]மனித உரிமைகள் கண்காணிப்பகம், ‘இலங்கை: திருகோணமலை 5 இற்கான நீதி இல்லை’, https://www.hrw.org/news/2019/07/08/sri-lanka-no-justice-trinco-5 எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், டிசம்பர் 15, 2020 அன்று அணுகப்பட்டது.

[30]வெரிட் ரிசேர்ச், ‘தஜுடீன் கதை: மூடி மறைத்த கொலை வழக்கு விசாரணை ஒக்டோபரில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு’, < https://www.veriteresearch.org/2019/07/22/wasim-thajudeen-murder/> எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

[31] டெய்லி FT, ‘ஜனநாயகத்திற்கான வழக்கறிஞர்கள் பொலிஸ் பரிசோதகர் (IP) சில்வாவின் இடமாற்றம் குறித்து கவலை’, http://www.ft.lk/News/Lawyers-for-Democracy-concerned-over-IP-Silva-transfer/56-667202 எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், டிசம்பர் 16, 2020 அன்று அணுகப்பட்டது.

[32]நீதிமன்றங்களிற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வருகை தராமை மற்றும் நீதிமன்றக் கட்டளைகளுடன் இணங்கி நடக்காமை என்பனவும் நீதிமன்ற நடவடிக்கைகளில் தாமதங்களை ஏற்படுத்துவதாக இனங் காணப்பட்டன.[33]

தற்போதைய அறிக்கை சாத்தியமாகும் கட்டமைப்புச் சீர்திருத்தங்களையும், அதே போன்று சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகத்தினுள் ஒரு விசேட குற்றவியல் புலன்விசாரணைப் பிரிவை ஸ்தாபிக்கும் சாத்தியம் பற்றியும் விபரமாக ஆராய்கிறது.[34] கீழ்வருபவை மேற்கொள்ளப்பட்ட பல பரிந்துரைகளின் சுருக்கமாகும்:

1. சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக சான்றுகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, புலன்விசாரணைகளின் போது பெறப்பட்ட தகவல்கள் மற்றும் பௌதிகச் சான்றுகளின் முறையான பேணிப் பாதுகாத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றின் பாதுகாத்தல்களுக்கு புலன்விசாரணை செய்யும் உத்தியோகத்தர்கள் பொறுப்பானவர்களாக ஆக்கப்படல் வேண்டும். புலன்விசாரணை உத்தியோகத்தர்கள் புலன்விசாரணை தொடர்பான அனைத்துச் சான்றுகளினதும் ஒரு முழுமையான பட்டியலை தயாரித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.[35]

2.ஒவ்வொரு வழக்கின் கீழும் திரட்டிய சான்றுகள் உள்ளடங்கிய தரவுத்தளம் பாராளுமன்ற கண்காணிப்புக் குழு அல்லது சம்பந்தப்பட்ட நீதிச்செயற்பாட்டாளர்களுக்கு அணுகப்படக்கூடியதாக இருத்தல், சான்றுகள் திரட்டும் செய்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்தும் என யோசனை தெரிவிக்கப்படுகிறது.[36]

3.பொலிஸ் அதிகார வரிசை முறையினுள் கட்டளைப் பொறுப்பு எனும் கோட்பாடு ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.[37] இது, பொலிஸ் காவலில் உள்ள போது சித்திரவதை, மற்றும் ஏனையவடிவில் கொடுமையான, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவுபடுத்தும் வகையில் நடத்துதல் மற்றும் தண்டித்தல்களுக்கு (CIDTP) சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பொறுப்பாகுவதை உறுதிப்படுத்தும்.

4.புலன்விசாரணை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் போதுமான தடயவியல் வசதிகள் மற்றும் பயிற்சி அதே போன்று புலன்விசாரணைகளை நடத்துவதற்கான வளங்கள் என்பன வழங்கப்படல் வேண்டும். வாகனங்கள், பயிற்றப்பட்ட ஆளணி மற்றும் உபகரணங்கள் உட்பட,

---

32 நியூஸ் பெர்ஸ்ட், 'கீத் நொயர் தாக்குதல்: அடையாள அணிவகுப்பு இரத்துச் செய்யப்பட்டது. https://www.newsfirst.lk/2019/08/20/keith-noyahr-assault-identification-parade-cancelled/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர், 17, 2020 அன்று அணுகப்பட்டது. ; சண்டே ஒப்சேவர், சட்ட மா அதிபர் சி.ஐ.டி இனர் மீது போர் அறிவிப்பு', http://www.sundayobserver.lk/2019/09/15/news/ag-declares-war-cid எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 17, 2020 அன்று அணுகப்பட்டது.

33 ஆசிய மனித உரிமைகள் ஆணையகம், இலங்கையின் செயலற்ற குற்றவியல் நீதி முறைமை' http://www.humanrights.asia/resources/books/sri-lankas-dysfunctional-criminal-justice-system/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 18, 2020 அன்று அணுகப்பட்டது.

34 "பொலிஸ் உத்தியோகத்தர்களின் சுயாதீனம் தொடர்பான கடுமையான கரிசனங்கள் முதலில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இந்த அம்சத்தை விட்டுச் செல்லும் ஒரு சீர்திருத்தம் மக்களின் மிகக் குறைவான கவனம், ஆதரவு அல்லது நம்பகத்தன்மை என்பவற்றையே பெறும். உதாரணத்திற்கு, ஹொங்கொங்கில் இதையொத்த ஒரு நிலைமை, பொலிஸ் முறைமைக்கு புறம்பாக ஊழலுக்கு எதிரான சுயாதீன ஆணைக்குழு (ICAC) என்றவொரு முகவரமைப்பு மூலமாக வெற்றிகரமாகக் கவனம் செலுத்தப்பட்டமை தீவிரமாக ஆராயப்படல் வேண்டும்". *இலங்கையின் செயலற்ற குற்றவியல் நீதி முறைமை* என்பதிலிருந்து.

35 குற்றவியல் தீர்ப்பாயங்களுக்கான ஐக்கிய நாடுகள் மேலதிகப் பொறிமுறை, 'நடைமுறை மற்றும் சான்றுகளுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (ICTR) விதிகள்', https://unictr.irmct.org/en/documents/rules-procedure-and-evidence எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 21, 2020 அன்று அணுகப்பட்டது.

36 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் பொறுப்புக்கூறலின் அவசியம்: ஏழு அடையாளமயமான வழக்குகள் மீதான பார்வை', https://www.cpalanka.org/the-need-for-accountability-in-sri-lankas-criminal-justice-system/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், நவம்பர் 20, 2020 அன்று அணுகப்பட்டது.

37 ஆசிய மனித உரிமைகள் ஆணையகம், 'இலங்கையின் செயலற்ற குற்றவியல் நீதி முறைமை', http://www.humanrights.asia/resources/books/sri-lankas-dysfunctional-criminal-justice-system/ எனும் இணையத் தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 18, 2020 அன்று அணுகப்பட்டது.

அவசியமான மனித மற்றும் பௌதிக வளங்களின் கிடைக்கப் பெறும் தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

5.மேலும் புலன்விசாரணை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு இருக்கின்ற, அவர்களின் உடல் ரீதியான இடரேது நிலைகளிலிருந்தான பாதுகாப்புகள் அதேபோன்று அலுவலகத்திலிருந்து இடமாற்றச் செய்முறைகள் மற்றும் அகற்றுதல்களில் சுயாதீனம் மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தும் நிறுவன ரீதியான பாதுகாப்புகள் ஆகிய இரண்டினதும் அடிப்படையில் பலப்படுத்தப்படல் வேண்டும்.

6.பொலிஸ் படையின் கட்டமைப்பு இனம், மதம் மற்றும் பால்நிலை உட்பட, இலங்கையின் பன்மைத்துவ சமூகநிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்தல் வேண்டும்.

7.கொடுக்கப்பட்ட திகதிகளில், வழக்கிற்கென நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களால் நீதிமன்றங்களில் கட்டாயம் ஆஜராகும் நிர்வாக நடைமுறையை அறிமுகப்படுத்துதல்.

அண்மைய தீர்ப்பொன்றில், இலங்கையின் உயர் நீதிமன்றம் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளினாலான அதிகாரத் துஷ்பிரயோகங்களின் அதிகரித்த சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்துள்ளது. சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிகாட்டல்களை குறிப்பிடுவதற்கும் நீதிமன்றம் பொலிஸ் மா அதிபரைப் பணித்தது.[38]

ஊழல், அரசியல் தலையீடு, வினைத்திறனின்மை மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த விடயங்களுடன் இலங்கையில் காணப்படும் ஒரு முறைமை முற்றிலுமாக சீர்திருத்தப்படக் கூடியதா? என பலரையும் கேள்வி எழுப்புவதற்கு வைத்துள்ளது. [39]சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரங்களுள் ஆழமாக வேரூன்றியுள்ள இத்தகைய செயலற்ற தன்மையை ஏற்படுத்திய பரந்த அரசியல் மற்றும் சமூக விடயங்கள் மீது கவனம் கொள்வது இங்கே வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறான சந்தேகங்களின் பின்னணியில், பொலிஸ் மற்றும் வழக்குத் தொடருனர்களால் புலன்விசாரிக்கும் அதிகாரத்தின் சாத்தியமான கட்டமைப்புகளின் பரிசீலித்தல் பயனுள்ளதாக இருக்கும். பின்வரும் பிரேரிக்கப்பட்ட அதிகாரங்களுடன் ஒரு விசேட குற்றவியல் புலன்விசாரணைப் பிரிவை சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகத்தினுள், ஸ்தாபிப்பது, ஒரு சாத்தியமாகக்கூடிய கட்டமைப்பாக இருக்குமென, அறிக்கையில் முன்னதாக முன்மொழியப்பட்டது:

1.இந்தப் பிரிவு, பொலிஸ் படையிலிருந்து எடுக்கப்பட்ட விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட புலன்விசாரணை உத்தியோகத்தர்கள் மற்றும் அவ்வாறே சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகத்தின் உறுப்பினர்களாகவுள்ள சட்டத்தை அப்பியாசிப்பவர்கள் (வழக்குத் தொடரும் உத்தியோகத்தர்கள்) ஆகியோர்களைக் கொண்டதாக இருக்கும்.[40]

---

[38]மனித உரிமைகளுக்கான மதிப்பளித்தல், சட்டத்தன்மை, அவசியம்,பாரபட்சமின்மை,விகிதாசாரம், சட்டத்தின் சமனான பாதுகாப்பு மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் தடுத்து வைத்தலில் விசேட கவனம் போன்ற பரந்த விடயங்களை வழிகாட்டல்கள் உள்ளடக்கும். *லந்தகே இஷாரா அஞ்சலி (பராயமடையாதவர்) மற்றும் மற்றொருவர் எதிர் மாத்தறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் ஏனையவர்கள்,* உயர் நீதிமன்றம் (அ.உ) மனு இல. 677/2012.

[39]ஆசிய மனித உரிமைகள் ஆணையகம், 'இலங்கையின் செயலற்ற குற்றவியல் நீதி முறைமை', http://www.humanrights.asia/resources/books/sri-lankas-dysfunctional-criminal-justice-system/ எனும் இணையத் தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 21 2020 அன்று அணுகப்பட்டது.

[40]"வழக்குத் தொடருனர்கள் புலன்விசாரணையை முன்னெடுக்கும் நாடுகளில், வழக்குத் தொடருதலில் அவர்களின் பயனுறுதியான வகிபாகம் காரணமாக, ஒரு சிறந்த புலன்விசாரணைக்கு இட்டுச் செல்லும் சில நன்மைகள் உய்த்துணரப்பட்டது. வழக்குத் தொடருனர்களாக சட்டம் பற்றிப் போதுமான அறிவு மற்றும் சட்டத்தின் அர்த்தப்படுத்தலிலான பரிச்சயம் என்பவற்றினால் குற்றப்பகர்வுக்கான வலுவான வழக்குகளை அவர்கள் தயார் செய்கின்றனர். அவர்களது திறமை மற்றும் அனுபவம் சட்டத்தை அமுல்படுத்தும் முறைமை குற்றத்தை எதிர்த்துப் போராடுவதில் ஒரு நன்மையாக உள்ளது. வழக்குத் தொடருனர்களால் புலன்விசாரணையில் முன்கூட்டிய சம்பந்தப்படுதல் ஒரு வெற்றிகரமான வழக்குத் தொடருதல் மற்றும் குற்றத் தீர்ப்புக்கு உத்தரவாதமளிக்கிறது.". குற்றத் தடுத்தல் மற்றும் குற்றம் புரிந்தவர்களின் கையாளுகைக்கான

2.சந்தேக நபர்களைக் குறுக்கு விசாரணை செய்தல், சாட்சியங்களைக் கேள்வி கேட்டல், சோதனை, கைப்பற்றுதல், பரிசோதனை, ஆராய்தல், தடுத்து வைத்தல் மற்றும் சந்தேக நபர்களை கைது செய்தல் உட்பட, குற்றவியல் வழக்குகளில் பொலிசாருக்கு சமாந்தரமான புலன்விசாரணை அதிகாரங்களை இப்பிரிவுடன் இணைந்துள்ள புலன்விசாரணை உத்தியோகத்தர்கள் கொண்டிருப்பர்.

3.சாட்சியங்களைத் திரிவுபடுத்தும் அரசியல் அழுத்தங்களைத் தவிர்ப்பதற்கு விசாரணை மேற்கொள்ளப்படும் வழக்குகளின் சாட்சியங்களின் இரகசியத்தை பிரிவின் புலன்விசாரிக்கும்/வழக்குத் தொடரும் உத்தியோகத்தர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

4.பிரிவின் உத்தியோகத்தர்கள் மீது அரசியல் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் ஏதேனும் முயற்சி சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகத்தின் அதிகாரத்திற்கு எதிராக புரியப்பட்ட ஓர் அவமதிப்புக் குற்றமாகக் கருதப்படல் வேண்டும்.

5.புலன்விசாரணைக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தரால் சம்பந்தப்பட்ட சாட்சியத்தின் ஒரு பட்டியல் தொகுக்கப்பட்டு பிரிவிற்கு கையளிக்கப்படல் வேண்டும்.

6.நிலுவையிலுள்ள புலன்விசாரணைகளின் நிலைகளைக் கலந்துரையாடுவதற்கு கிரமமான கூட்டங்களைக் கூடுவதற்கான ஒரு முறையினைபொலிஸ் மற்றும் வழக்குத் தொடரும் உத்தியோகத்தர்கள் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அங்கு வழக்குத் தொடரும் உத்தியோகத்தர்கள் புலன்விசாரணைகளை ஒரு சரியான மற்றும் கால நேரத்தின் படி பூர்த்தி செய்வதற்கு அறிவுறுத்துவதற்கு முடியும். கொலை வழக்குகளில் இரத்தப் பரிசோதனை, அல்லது சுடுகலன்கள் பாவிக்கப்பட்ட வழக்குகளில் சுடுகலன் சோதனைகள் போன்ற விஞ்ஞானபூர்வ சாட்சியங்களின் முக்கியத்துவம் பற்றியும் வழக்குத்தொடருனர்கள் பொலிசாருக்கு அறிவுறுத்துதல் வேண்டும்.[41]

## சட்டரீதியிலான சீர்திருத்தங்கள்

மா.கொ.நி இன் முன்னைய அறிக்கை, பொறுப்புக்கூறல் விடயங்கள் மீது கவனம் செலுத்துவதற்கு, சர்வதேச குற்றங்களை உள்ளிணைத்துக் கொள்வதற்கு மற்றும் செய்முறை இடைவெளிகள் மீது கவனம் செலுத்துவதற்குமாக மீளாய்வு மற்றும் மறுசீராக்கம் என்பவற்றுக்கு பரிந்துரைக்கிறது.[42] தற்போதைய அறிக்கை பொறுப்புக்கூறலைத் தடை செய்யும் மட்டுப்பாடுகளை ஆராயும் என்பதுடன் சமகால நியாயாதிக்கங்களிலிருந்தான அனுபவங்கள் மீது கவனம் செலுத்தி, சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளை மேற்கொள்கிறது.

---

ஐக்கிய நாடுகள் ஆசிய மற்றும் தூர கிழக்கு நிலையம் (UNAFEI), 'பொலிசுடன் வழக்குத் தொடருதல் மற்றும் புலன்விசாரித்தல் பொறுப்பு என்பவற்றின் தொடர்பு', https://www.unafei.or.jp/publications/pdf/RS_No53/No53_29RC_Group1.pdf எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 22, 2020 அன்று அணுகப்பட்டது.

[41]குற்றத் தடுத்தல் மற்றும் குற்றம் புரிந்தவர்களின் கையாளுகைக்கான ஐக்கிய நாடுகள் ஆசிய மற்றும் தூர கிழக்கு நிலையம் (UNAFEI), 'பொலிசுடன் வழக்குத் தொடருதல் மற்றும் புலன்விசாரித்தல் பொறுப்பு என்பவற்றின் தொடர்பு', https://www.unafei.or.jp/publications/pdf/RS_No53/No53_29RC_Group1.pdf எனும் இணையத்தள
முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 22, 2020 அன்று அணுகப்பட்டது.

[42]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் பொறுப்புக்கூறலின் அவசியம்: ஏழு அடையாளமயமான வழக்குகள் மீதான கண்ணோட்டம்', https://www.cpalanka.org/the-need-for-accountability-in-sri-lankas-criminal-justice-system/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர் 23, 2020 அன்று அணுகப்பட்டது.

இலங்கையின் சட்ட வரைதல் செய்முறைகள் அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் பங்குபற்றல் என்பவற்றின் இல்லாமைக்காக விமர்சிக்கப்பட்டன.[43] ஒரு சட்ட மூலம்அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றதும், அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகிறது.[44] சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரம் முடிவடைந்ததும், அது பாராளுமன்றத்தில் நிகழ்ச்சித் தாளில் இடப்படுவதற்கு முடியும். இதிலிருந்து ஒரு வார காலத்தினுள் பிரஜையொருவர் சட்ட மூலத்தை சவாலுக்கு உட்படுத்தலாம்.[45] இந்த மட்டுப்படுத்தப்பட்ட கால அவகாசம் சட்டவாக்க வரைதல் செய்முறையுடன் பிரஜை சம்பந்தப்படுதல் மற்றும் அனைத்து பாத்தியதை கொண்டவர்களும் சம்பந்தப்பட்டு விவாதித்தல் மற்றும் கலந்தாலோசித்தல் என்பவற்றுக்கான இடைவெளியை குறைக்கின்றது.[46]

பின்வருபவை மேலும் கவனத்தைத் தேவைப்படுத்தும் சட்டங்கள் தொடர்பான சிலவாகும்:

### *1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை*

குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (CCP) குற்றவியல் வழக்குகளின் வழக்குத் தொடருதலில் சட்ட மா அதிபருக்கு பரந்த அதிகாரத்தை அளிக்கின்றது.[47] இந்த அறிக்கையில் முன்னம் பரிந்துரைத்தவாறு, ஒரு சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு, சட்டமா அதிபரின் வழக்குத் தொடருதல் அதிகாரங்களை அகற்றுவதற்கு குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தப்படுதல் வேண்டும். மேலும், இந்த பரந்த அதிகாரங்கள் சுயாதீன பொது வழக்குத் தொடருனர் அலுவலகப் பணிப்பாளருக்கு கையளிக்கப்படும்.

---

[43]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கை – தெற்காசியாவில் தகவல்களுக்கான உரிமை மீதான ஒரு மதிப்பாய்வு', < http://www.cpalanka.org/wp-content/uploads/2007/8/Sri_Lanka.doc> எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

[44]இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 78 (திருத்தியமைக்கப்பட்டவாறு).

[45]இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 121 (திருத்தியமைக்கப்பட்டவாறு).

[46]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தத்தின் கீழான மாற்றங்களின் சாராம்சம்', < https://www.cpalanka.org/wp-content/uploads/2020/09/Final-doc-Summary-of-Changes-Under-the-Proposed-20th-Amendment.pdf> எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், ஜனவரி 16, 2021 அன்று அணுகப்பட்டது.

[47]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தை மீள்சிந்தித்தல்: சீர்திருத்தங்களுக்கான யோசனைகள்', https://www.cpalanka.org/rethinking-the-attorney-generals-department-in-sri-lanka-ideas-for-reform/எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும்,நவம்பர் 23, 2020 அன்று அணுகப்பட்டது.

சுயாதீன நிபுணர் அறிக்கையின் படி தண்டனை விலக்களிப்பை எதிர்த்துப் போராடுவதற்கான கொள்கைத் தொகுதி இற்றைப்படுத்தப்படல் வேண்டும், பல நாடுகளில் நீதிக்கான உரிமை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகம் குற்றவியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் மற்றும் பங்குபற்றுவதற்கும் இயலும் வகையில் சட்டங்களினால் பலப்படுத்தப்பட்டுள்ளன.[48] போதியளவில் வழக்குத் தொடருதலின்மை, வழக்குத் தொடருதல் செய்முறைகளிலான தாமதங்கள் அதே போன்று சுயாதீனமான வழக்குத்தொடருனர்கள் தொடர்பான கரிசனைகள் என்பன இது இலங்கைக்கான ஒரு சாத்தியம் கொண்ட சீர்திருத்தமாகவும் இருக்குமெனத் தெரிவிக்கின்றன.

குற்றவியல் நடைமுறைக் கோவை, பிரிவு 136 இன் கீழ், சட்டமா அதிபரின் முன் அனுமதியின்றி நீதவான் நீதிமன்றத்தின் முன் தனியார் வழக்குத் தொடருதல்களை முன்னெடுப்பதற்கு பாதிப்படைந்தவர்களுக்கு அனுமதிக்கின்றது. எனினும், அத்தகைய தனியார் வழக்குத் தொடருதல்கள் நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட குற்றங்களுக்கு எதிரானவை தொடர்பில் மட்டும் முன்னெடுக்கப்பட முடியுமென்பதுடன், விசேடமாக அவ்வாறான முறைப்பாடு அரசின் ஒரு உத்தியோகத்தர் அல்லது ஊழியருக்கு எதிராக அந்த உத்தியோகத்தர் அல்லது ஊழியரால் உத்தியோகபூர்வக் கடமைகளின் நிறைவேறுதலுடன் இணைந்ததான அல்லது தொடர்புபட்ட ஒரு விடயமாகத் தாக்கல் செய்யப்பட்டிருத்தல் போன்ற சில சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் வழக்குத் தொடருதலை பொறுப்பேற்றுக் கொள்ளலாம்.[49]

### *1887 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தண்டனைக் கட்டளைச் சட்டக் கோவை*

கணிசமானளவான குற்றவியல்சட்டம் இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையினுள் உள்ளடங்கியுள்ளது. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பவற்றின் மீறல்களிலிருந்து எழும் சர்வதேசக் குற்றங்களை தண்டனைச் சட்டக் கோவை உள்ளடக்கவில்லை. இலங்கையின் உள்நாட்டு குற்றச் சட்டம் இனவழிப்பு, மனிதாபிமானத்திற்கெதிரான குற்றங்கள் மற்றும் சர்வதேசமற்ற ஒரு ஆயுத மோதல் சூழ்நிலையில் புரியப்பட்ட யுத்தக் குற்றங்கள் போன்றவற்றை குறிப்பாக குற்றவியல்படுத்தாது.[50]

அதனால் யுத்தக் குற்றவாளிகள் மற்றும் ஏனைய பாரிய மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கு இருக்கின்ற குற்றவியல் குற்றங்களே பிரயோகிக்கப்பட வேண்டியதாகவுள்ளது. இது, குற்றத்தின் மிகவும் கடுமையான மற்றும் திட்ட முறையிலான அம்சங்களை கணக்கிற் கொள்ளாத தவறுதலை ஏற்படுத்தலாம். ஆயுத மோதல் சூழ்நிலைப் பின்னணியில் நிகழ்கின்ற பாலியல் குற்றங்கள் (விசேடமாக காவலின் போதான பாலியல் தாக்குதல்), மனிதக் கேடயங்களின் உபயோகம், மனிதாபிமான நிவாரணங்களை மறுத்தல், வலிந்த காணாமற் போதல்கள், நீதிக்கு புறம்பான கொலைகள் மற்றும் ஏனைய வன்முறைகள் போன்ற மனித உரிமை மீறல்கள் மீது கவனம் செலுத்துவதற்கு தண்டனைச் சட்டக் கோவை திருத்தப்படுதல் வேண்டும்.

---

[48] ஐ.நா மனித உரிமைகள் பேரவை, 'தண்டனை விலக்களிப்பை எதிர்த்துப் போராடுவதற்கு கொள்கைத் தொகுதியை இற்றைப்படுத்துவதற்கு சுயாதீன நிபுணரின் அறிக்கை', https://www.refworld.org/docid/42d66e780.html எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 20, 2020 அன்று அணுகப்பட்டது, பந்தி 44 இல்.

[49] 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டம், பிரிவு 191 (2).

[50] Isabelle Lassée and Eleanor Vermunt, 'சட்ட மூலத்தைப் பொருத்துதல்': இலங்கைச் சட்டத்திற்கள் சர்வதேசக் குற்றங்களை உள்ளிணைத்தல் (Fitting the Bill': Incorporating International Crimes into Sri Lankan Law) இசபெல்லா லஸ்சீ (பதிப்பாளர்), இலங்கையின் முயற்சிப்பதற்கான தருணம் : மோதல் தொடர்பான துஷ்பிரயோகங்கள் மீது வழக்குத் தொடருதல் (Time to Try: Prosecuting Conflict-Related Abuses) (சட்டக் கற்கைகளுக்கான தெற்காசிய நிலையம் 2019).

தண்டனைச் சட்டக்கோவை ஏற்பாடுகள் கூட சர்வதேசக் குற்றங்களின் அம்சங்களைப் போதியளவில் பூர்த்தி செய்வதற்கு தவறக்கூடும்.[51] மேலும், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழுள்ள பொறுப்பைப் பணித்தல் போன்ற பொறுப்பின் வகைகள் உள்நாட்டு குற்றவியல் சட்டத்தில் இல்லை. அதன் காரணமாக, குற்றத்திற்கு மிகவும் பொறுப்பானவர்களும் வழக்குத் தொடருதலுக்கு தப்பித்துக் கொள்வர்.

உதாரணத்திற்கு, முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் (ICTY) சாட்சியம் மற்றும் நடைமுறை விதிகள், மீளாய்விற்காக ஒரு குற்றப்பகர்வு கிடைத்ததும், மிகவும் சிரேஷ்ட தலைவர்கள் ஒருவர் அல்லது பலர் தீர்ப்பாயத்தின் நியாயாதிக்கத்திற்குள் வரும் குற்றங்களுக்காக, கூடுதல் பொறுப்புள்ளவர்களாக சந்தேகிக்கப்பட்டனரா என குற்றப்பகர்வினை தீர்ப்பாயத்தின் சபை[52], முதலில் தீர்மானித்தல் வேண்டுமென குறிப்பிடுகிறது. குற்றப்பகர்வு இந்த தராதரத்தினை திருப்தி செய்யவில்லையென தீர்ப்பாயத்தின் சபை தீர்மானிப்பின், குற்றப்பகர்வு நிராகரிக்கப்படும்.[53]

*2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டோருக்கும் மற்றும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்*

எந்தவொரு நீதி முறையினதும் நம்பகத்தன்மை மற்றும் தண்டனை விலக்களிப்புக்கு எதிரான போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சியின் பயனுறுதியான பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடு முக்கியமானதாகும்.[54] குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையின் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் செயற்றிறன் அபிவிருத்தி மற்றும் அவ்வாறே அதிகார சபையின் சுயாதீனம் உட்பட, சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பாதிப்புற்றவர் மற்றும் சாட்சி பாதுகாப்புப் பொறிமுறையை மேம்படுத்துவதற்கு மா.கொ.நி முன்னம் பரிந்துரைகளை மேற்கொண்டது.[55] உதாரணத்திற்கு, அரச நிறுவனங்களில் நடைபெறும் ஊழல் மற்றும் அரசியல் மயமப்படுத்தலினால் சிக்கலான, பாதுகாப்புப் பொறிமுறையில் சம்பந்தப்பட்டுள்ள அரச தரப்புகளிலிருந்து தலையீட்டுக்கு தேசிய அதிகாரசபை உள்ளாகலாம். அதனால் சீர்திருத்தங்கள், அதிகார சபையின் முகாமைத்துவ சபைக் கட்டமைப்பில் சுயாதீன உறுப்பினர்கள் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலம், அதிகார சபையின் செயற்பாடுகளை அப்பியாசித்தலில் அதன் சுயாதீனம் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.

மீள் பாதிப்புறுதலைத் தடுப்பதற்கும் மற்றும் சட்டத்தின் பயனுறுதியான அமுல்படுத்துதலிற்கும், மிக முக்கியமாக அதிகார சபையிடமிருந்து பாதுகாப்பை நாடுபவர்கள் உட்பட, அனைத்து அக்கறை கொண்டவர்களிடமிருந்தான உள்ளீடுகளுடனும் பாதுகாப்புக்கான பொறிமுறைச் சீர்திருத்தங்கள் வலுப்படுத்தப்படல் வேண்டும்.[56]

*1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடு)*

---

[51]Isabelle Lassée and Eleanor Vermunt, இன் 'Fitting the Bill' எனும் அதே மூலம்.

[52]தீர்ப்பாயத்தின் சபை தலைவர், உப தலைவர், தீர்ப்பாயத்தின் தலைமை நீதிபதிகளை உள்ளடக்குகின்றது.

[53]குற்றவியல் தீர்ப்பாயங்களுக்கான ஐக்கிய நாடுகள் சர்வதேச எஞ்சிய பொறிமுறை, நடைமுறை மற்றும் சாட்சியங்களின்ICTY விதிகள், https://www.icty.org/x/file/Legal%20Library/Rules_procedure_evidence/IT032Rev50_en.pdf எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 21, 2020 அன்று அணுகப்பட்டது. விதி 28 ஐ பார்க்கவும்.

[54]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், "குற்றச்செயல்களில் பாதிக்கப்பட்டோர்கள் மற்றும் சாட்சிகளின் உதவி மற்றும் பாதுகாப்புக்கான சட்ட மூலம்: விமர்சனம் மற்றும் பரிந்துரைகள்', https://www.cpalanka.org/the-draft-bill-for-the-assistance-and-protection-of-victims-of-crime-and-witnesses-critique-and-recommendations/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 21, 2020 அன்று அணுகப்பட்டது. .

[55]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'பாதிப்புற்றோர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புக்கான ஒரு வலுவான பொறிமுறையின் தேவை', https://www.cpalanka.org/the-need-for-a-strong-victim-and-witness-assistance-and-protection-mechanism/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர், 21, 2020 இன்று அணுகப்பட்டது.

[56]சர்வதேச உண்மை மற்றும் நீதி செயல்திட்டம், 'சாட்சி பாதுகாப்பு: ஆடுகளைப் பாதுகாப்பதற்கு ஓநாயை இடுதல்', https://itjpsl.com/reports/witness-protection எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 21, 2020 அன்று அணுகப்பட்டது.

ஒரு தற்காலிக நடவடிக்கையாக 1979 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்ட, பயங்கரவாத தடைச் சட்டம் (PTA), பின்னதாக, பயனுறுதியான வகையில் நிரந்தர சட்டமாக ஆகியது. இந்த பயங்கரவாத தடைச் சட்டம் சோதனை, கைது மற்றும் தடுத்து வைத்தல் என்பவற்றுக்கு பரந்த அதிகாரத்தை வழங்குகின்றதுடன் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நன்னம்பிக்கையின் பேரில் செயற்பட்டார்கள் எனக் கருதப்படின் அவர்களுக்கு தண்டனை விலக்களிப்பையும் அளிக்கின்றது.[57] எனினும், நன்னம்பிக்கை என்பதற்கு வரைவிலக்கணம் ஒன்று இல்லையென்பதுடன், ஒரு பரந்த வீச்சிலான நடவடிக்கைகள் நன்னம்பிக்கையுடன் மேற்கொள்ளப்பட்டதாக அர்த்தப்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கிறது.[58]

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்ட ஒரு நபரை ஒன்றரை வருடங்கள் வரை தடுத்து வைக்கப்படுவதற்கு அமைச்சர் பணிப்புரை செய்யலாம். இது, சான்றுகளின் கட்டளைச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு முரணானது, ஒரு வாக்குமூலம் அல்லது காவலில் உள்ள போது அளிக்கப்பட்ட ஒப்புதல் அந்த நபருக்கு எதிராக நிரூபிக்கப்படலாம், என்பதுடன் தன்னைச் சுற்றவாளியாக நிரூபிக்கும் கட்டாயம் குற்றஞ் சாட்டப்பட்டவர் மீது வீழ்வதால், அதனை நிரூபிக்கும் கடப்பாடு கவனத்திற்குரியதல்ல.[59] குற்றஞ் சாட்டப்பட்டவர்களிடமிருந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை பெறும் முயற்சிகளில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் சித்திரவதை மற்றும் ஏனைய வடிவங்களிலான கொடூரமான மற்றும் மனிதத் தன்மையற்ற விதத்தில் நடத்துதல் போன்றவற்றுக்கு ஊக்கப்படுத்துவதை ஏற்படுத்தியது.[60]

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடுத்து அண்மையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஓர் அதிகரித்த எண்ணிக்கையிலான கைதுகள் மேற்கொள்ளப்பட்டன. இது, பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் இலங்கையின் கடந்த கால அனுபவத்திற்கு எதிரான ஒரு கவலைக்குரிய விடயமாகும். அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் மற்றும் விமர்சிப்பவர்களை இலக்கு வைக்கவும் மற்றும் அச்சுறுத்துவதற்கும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களால் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பொலிஸ் காவலில் உள்ள போது சித்திரவதை மற்றும் இறப்பு என்பவற்றின் எண்ணற்ற பல சந்தர்ப்பங்களை இது ஏற்படுத்தியுள்ளது, இவற்றுக்கு பரிகாரம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன இலங்கையின் நீதி முறைமையினுள் மிகவும் அரிதானவையாகவே இருந்தன.

இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன்விசாரணை அறிக்கை, அதனை நீக்கும் ஒரு நோக்கத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஒரு மதிப்பீட்டுக்கு பரிந்துரைக்கிறது.[61] மேலும், அது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்களின் வழக்குகள் அனைத்தையும் மீள்பரிசீலிப்பதற்கும் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் மற்றும் பாதுகாப்பு முகவர்களால் புரியப்பட்ட சித்திரவதைகளின் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் புலன்விசாரணை செய்து வழக்குத் தொடர்வதற்கும் பரிந்துரைக்கிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தால் மனித உரிமைகளின் சமகால தராதரங்கள் தொடர்பான

---

[57] 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடு) பிரிவு 26.

[58] சர்வதேச நீதியாளர்களின் ஆணையகம்: 'இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களுக்கான பொறுப்புக்கூறலின் சவால்கள்: ஒரு கலந்துரையாடல் பத்திரம்', https://www.icj.org/wp-content/uploads/2017/03/Sri-Lanka-FCO-Accountability-1-Advocacy-Analysis-brief-2017-ENG.pdf எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கும், டிசம்பர் 21, 2020 அன்று அணுகப்பட்டது.

[59] 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடு) பிரிவு 16.

[60] சர்வதேச மன்னிப்புச் சபை, 'இலங்கை: மனித உரிமைகளின் செலவில் பயங்கரவாதத்தை எதிர்த்தல்', https://www.amnesty.org/download/Documents/ASA3797702019ENGLISH.PDF எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 20, 2020 இன்று அணுகப்பட்டது. ; மனித உரிமைகள் கண்காணிப்பகம், 'சாட்சியங்களின்றி சிறையடைப்பு: இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் துஷ்பிரயோகங்கள்', https://www.hrw.org/report/2018/01/29/locked-without-evidence/abuses-under-sri-lankas-prevention-terrorism-act எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 20, 2020 அன்று அணுகப்பட்டது.

[61] ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, 'இலங்கை மீதான மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலக விசாரணை அறிக்கை' https://www.ohchr.org/EN/HRBodies/HRC/Pages/OISL.aspx எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கும், நவம்பர் 26, 2020 அன்று அணுகப்பட்டது. பக்கம் 249 ஐப் பார்க்கவும்.

கரிசனைகளை மா.கொ.நி. தொடர்ச்சியாக எழுப்பி வந்துள்ளதுடன் அதன் நீக்கத்திற்காக குரலெழுப்பியும் வந்துள்ளது.[62]

[62]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'பயங்கரவாத தடைச்சட்டத்தின் (PTA) நீக்கம் மற்றும் மாற்றீடு செய்தலுக்கான அவசியம்', https://www.cpalanka.org/the-need-to-repeal-and-replace-the-prevention-of-terrorism-act-pta/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 21, 2020 அன்று அணுகப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பான மா.கொ.நி இன் அறிக்கை', https://www.cpalanka.org/cpa-statement-on-the-new-regulations-under-the-prevention-of-terrorism-act/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 22, 2020 அன்று அணுகப்பட்டது. ; மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கான சவால்கள் தொடர்பில் மா.கொ.நி தலையீடு செய்கிறது.' https://www.cpalanka.org/cpa-intervenes-on-the-challenge-to-the-proposed-counter-terrorism-bill/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 22, 2020 அன்று அணுகப்பட்டது.

## 4.முடிவுரை

தற்போதைய அரசாங்கத்தால் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை முன்னேற்றுவதற்கான இலங்கையின் பற்றுறுதிகளின் மறுத்தல் மற்றும் அவ்வாறான நோக்கத்துடனான கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் என்பன இதுவரை அடைந்த மட்டுப்பாட்டுடனான முன்னேற்றத்தைக் கூட பின்னோக்கித் திருப்புவதானது, மனித உரிமைகள் மீறல்களின் பாதிப்பிற்காளானவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதிலான சாத்தியம் பற்றி தீவிர கரிசனைகளை எழுப்புகிறது. மேலும், மா.கொ.நி தொடர்ச்சியாக சுட்டிக்காட்டியவாறு, இந்த நடவடிக்கைகள் சட்டவாட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றை பலவீனப்படுத்துகிறது.[63]

இந்தப் பின்னணியில், மா.கொ.நி தற்போதைய அறிக்கை அதே போன்று இவ் விடயம் தொடர்பான முன்னைய அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் சட்ட ரீதியிலான சீர்திருத்தங்களின் அவசியத்தை வலியுறுத்துகிறது. இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அடையாளமயமான வழக்குகள், முன்னேற்றம் மந்தமாகவும் மற்றும் காலம் இழுத்தடிக்கப்படுகின்றதுமான இதையொத்த எண்ணற்ற பல வழக்குகளிடையே ஒரு கைப்பிடியளவு மட்டுமேயானவையாகும். இந்த மீறல்களின் பாதிப்பிற்குள்ளானவர்கள் இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையின் மூலமாக நீதியை எப்போதாவது பெற்றுக் கொள்வதில் நம்பிக்கை இழந்து வருகின்றனர் என்பதுடன் முழுமையான மற்றும் நேர்மையான சீர்திருத்தங்கள் மூலமாக அவர்களது கரிசனைகள் கவனம் செலுத்தப்படுவது முக்கியமானதாகும்.

[63]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ‘சுனில் ரட்நாயக்கவிற்கு பொது மன்னிப்பளிக்கும் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தும் அடிப்படை உரிமைகள் மனுக்கள்’, https://www.cpalanka.org/fundamental-rights-applications-challenging-the-decision-to-pardon-sunil-ratnayake/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும், டிசம்பர் 22, 2020 அன்று அணுகப்பட்டது. ; *மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மா அதிபர் SC FR 32/2020* https://www.cpalanka.org/centre-for-policy-alternatives-v-attorney-general-sc-fr-32-2020/

## பின்னிணைப்பு I – பத்து அடையாளமயமான வழக்குகளின் காலவொழுங்கு மற்றும் விபரங்கள்

கீழ்வரும் தகவல்கள் ஊடக அறிக்கைகள் மூலம் மா.கொ.நி ஆல் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். மார்ச் 2019 இற்கு முன்னர், இந்த வழக்குகள் தொடர்பான முன்னேற்றம் மற்றும் பின்னணி என்பவற்றுக்கு, இவ்விடயம் தொடர்பாக மா.கொ.நி இனாலான முன்னைய அறிக்கையைப் பார்க்கவும்.[64]

| 1. ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் படுகொலை, 2005 | |
|---|---|
| 24 டிசம்பர் 2005 | ஒரு சிரேஷ்டதமிழ் அரசியல்வாதியும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ) பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் மட்டக்களப்பிலுள்ள புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து இரண்டு இனந் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். |
| 11ஒக்டோபர் 2015 | கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான சிவனேசதுரை சந்திரகாந்தன் அல்லது பிள்ளையான் முன்னாள் பா.உ ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் கொலை தொடர்பாக குற்றப் புலன்விசாரணைப் பிரிவினரால் (சி.ஐ.டி) கைது செய்யப்பட்டார். ஏனைய இரண்டு சந்தேக நபர்களான, மட்டக்களப்பை வதிவிடமாகக் கொண்ட எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா அல்லது பிரதீப் மாஸ்டர் மற்றும் ரெங்கசாமி கனகநாயகம் அல்லது கஜன் மாமா ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். |
| 4 ஜனவரி 2018 | பிள்ளையான் மற்றும் அவரது கூட்டாளிகள் பலரும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் பிரசன்னமாகினர். |
| 13 ஜனவரி 2019 | த.தே.கூ. இன் பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் கொலையின் இரண்டு பிரதான சந்தேக நபர்களின் குற்ற ஒப்புதல்கள் தாமாக முன்வந்து அளிக்கப்பட்டவை எனவும் அவை நீதிமன்றத்தில் அனுமதிக்கத்தக்கவை என மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்தது.<br><br>ரெங்கசாமி கனகநாயகம் அல்லது கஜன் மாமா மற்றும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா அல்லது பிரதீப் மாஸ்டர் ஆகியோர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சமர்ப்பிப்பதற்கு நீதிபதி M.Y.M.இர்ஷாடீன் வழக்குத் தொடருனருக்கு அனுமதி அளித்தார். துணை இராணுவக் குழுத் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் அல்லது பிள்ளையானின், வழக்கறிஞர்கள் கொலைக்குப் பிள்ளையானைத் தொடர்புபடுத்திய குற்ற ஒப்புதல்களை ஏற்பதற்கு மறுத்தனர்.<br><br>இது, இரண்டு நீதிபதிகளைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு செய்யப்பட்டது. |

[64]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ‘இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் பொறுப்புக்கூறலின் அவசியம்: ஏழு அடையாளமயமான வழக்குகள் மீதான பார்வை’, https://www.cpalanka.org/the-need-for-accountability-in-sri-lankas-criminal-justice-system/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப்பெறும், நவம்பர 23, 2020 அன்று அணுகப்பட்டது.

| | |
|---|---|
| 22 ஜனவரி 2020 | த.தே.கூ. இன் முன்னாள் பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் படுகொலைப் புலன்விசாரணை வழக்குத் தொடர்பான விசாரணை வழக்கை 25 பிப்ரவரி 2020 வரை தள்ளி வைப்பதாகத் தீர்மானித்தது. |
| 12 மார்ச் 2020 | கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அல்லது பிள்ளையான் விளக்கமறியலில் இருக்கும் சமயத்திலேயே, பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டார். |
| 11 மே 2020 | தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பாக விளக்கமறியலில் உள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (த.ம.வி.பு) அமைப்பின் தற்போதைய தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் அல்லது பிள்ளையானிற்கு எதிரான வழக்கு விசாரணைக்காக 27 ஜூலை எடுக்கப்படும். |
| 18 ஆகஸ்ட் 2020 | ஆகஸ்ட் 5 ஆம் திகதியன்று நடைபெற்ற 2020 பாராளுமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட, சிவனேசதுரை சந்திரகாந்தன், புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலும் மற்றும் எதிர்வரும் அமர்வுகளிலும் பங்குபற்றுவதற்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. |
| 22 செப்டம்பர் 2020 | 'பிள்ளையான்' மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். |
| 14 நவம்பர் 2020 | மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்ற ஒப்புதல்கள் அனுமதிக்கப்படத்தக்கவையல்ல என தீர்மானித்தது. ஒப்புதல் வாக்குமூலம் முதலில் மேற்கொள்ளப்பட்ட வேளையில், முதலாவது எதிரியிடம் நீதிபதி அவரது வாக்குமூலம் அவரிற்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம் என்பதை மனதில் கொள்ளுமாறு கூறியிருந்தார். இக்கூற்று ஓர் 'ஊக்குவித்தல் அல்லது அச்சுறுத்தல்', இற்கு ஒப்பானதென மேன்முறையீட்டு நீதிமன்றம் கண்டது. |
| 24 நவம்பர் 2020 | ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கதல்ல என மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதியதால், பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அல்லது 'பிள்ளையான்', மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டார். வழக்கைத் தொடர்வதா அல்லது இல்லையா என அவர் நினைக்கும் தீர்மானத்தை எட்டுவதற்கு சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது. |
| 11 ஜனவரி 2021 | முன்னாள் பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பாக பிள்ளையானுக்கு எதிரான வழக்கைக்கைவிடுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்தது. சட்டமா அதிபர் திணைக்களம் அதன் தீர்மானத்தை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு அறிவித்ததாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜயரட்ன தெரிவித்தார். |
| 13 ஜனவரி 2021 | முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின்கொலை தொடர்பாக பிள்ளையானுடன் ஏனைய நான்கு சந்தேக நபர்களும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு மற்றும் விடுதலை செய்யப்பட்டனர்.<br><br>மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி S.சூசைதாசன் வழக்கினைத் தள்ளுபடி செய்வதற்கு கட்டளையிட்டார். |

| 2. ‘திருகோணமலை ஐவர்’: ஐந்து தமிழ் மாணவர்களின் படுகொலை, 2006 | |
|---|---|
| 3 ஜூலை 2019 | திருகோணமலை மாணவர்களின் படுகொலை வழக்கில் விசேட அதிரடிப் படையை (STF) சேர்ந்த சந்தேக நபர்கள் திருகோணமலை பிரதான நீதவான் M.ஹன்சா அவர்களால் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். |
| 10 ஜூலை 2019 | திருகோணமலை மாணவர்களின் கொலை வழக்கில் புதிதாகப் புலன்விசாரணைக்கு சட்டமா அதிபர் பணித்ததுடன் வழக்கில் சாட்சிகளை கண்டு பிடிக்க முயற்சிப்பதற்கு பதில் பொலிஸ்மா அதிபர் C.D.விக்கிரமரட்ண அவர்களை அறிவுறுத்தினார். அநேகமான சாட்சிகள் வெளிநாடுகளில் இருப்பதாக நம்பப்படுகிறது. |

| 3. ACF தன்னார்வப் பணியாளர்களின் படுகொலை, 2006 | |
|---|---|
| 13 ஜூன் 2019 | சட்டமா அதிபர், தப்புல டி லிவேரா,ACF படுகொலை வழக்கில் புலன்விசாரணைகளை பொலிஸ் துரிதப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களத்திற்கு கட்டளையிட்டார். |

| 4. கீத் நொயர் அவர்களின் கடத்தல், 2008 | |
|---|---|
| 11 ஜூன் 2019 | கல்கிசை மேலதிக நீதவான் C.H.G.லியனகே த நேஷன் பத்திரிகை முன்னாள் இணையாசிரியர் கீத் நொயரின் கடத்தல் தொடர்பாக ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவப் படைப் பிரதானி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர மற்றும் சந்திரபா ஜயசிங்க ஆகியோர் மீது விதிக்கப்பட்டிருந்த பிணை நிபந்தனைகளை இரத்துச் செய்வதற்கு கட்டளையிட்டார். |
| 23 ஆகஸ்ட் 2019 | கீத் நொயரின் வழக்குத் தொடர்பாக இராணுவப் புலனாய்வு சார்ஜண்ட சமிக்க சுமித் குமார கைது செய்யப்பட்டார். |
| 12 செப்டம்பர் 2019 | பத்திரிகையாளர் கீத் நொயரின் ஆட் கடத்தல் வழக்குத் தொடர்பாக குற்றப் புலன்விசாரணைத் திணைக்களத்தின் தாமதமான விசாரணை குறித்து விசாரணை செய்வதற்கு சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபரை வலியுறுத்தினார். |
| 22 செப்டம்பர் 2019 | குற்றப் புலன்விசாரணைத் திணைக்களம் (சி.ஐ.டி) முன்னாள் பிரதி ஆசிரியர் கீத் நொயரின் ஆட்கடத்தல் மற்றும் தாக்குதல் தொடர்பான விசாரணையில் ஐக்கிய அமெரிக்க FBI இன் ஒத்துழைப்பை நாடவுள்ளது என அறிவிக்கப் பட்டது. |
| 1 செப்டம்பர் 2020 | அரச உத்தியோகத்தர்களின் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில், ஓய்வுபெற்ற, இராணுவப் படை வீரரான சார்ஜண்ட் சோமசூரிய, பத்திரிகையாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தொம்பே எனுமிடத்திலுள்ள வீடொன்றில் வைத்திருக்கப்பட்டு முன்னாள் பாதுகாப்புச் செயலரும், தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தபாய ராஜபக்சவின் அறிவுறுத்தல்களின் பேரில் தாக்கப்பட்டதாக கூறும்படி பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா தன்னை அச்சுறுத்தியதாகக் கூறினார். |
| | மேலும், தான் ஒரு சந்தர்ப்பத்தில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு (சி.ஐ.டி) அழைக்கப்பட்டதாகவும், அங்கு சில சி.ஐ.டி உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து சில்வா |

| | |
|---|---|
| | தன்னை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று தனது மனைவியையும் கேள்விகள் கேட்டதாகக் கூறினார். "அவ்வாறானதொரு வாக்குமூலத்தை நான் வழங்கத் தவறின், எனது ஓய்வூதியத்தை நான் இழப்பேனென்றும் எனது பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுமெனசில்வா தன்னை அச்சுறுத்தியதாகவும்" கூறிய அவர், பின் விளைவுகள் குறித்த பயத்தின் காரணமாகத், தான் அவ்வாறு வாக்கு மூலம் தருவதற்கு இணங்கியதாகவும், மேலும் தெரிவித்தார்.<br><br>இந்த ஒப்புக்கொள்ளுதலைத் தொடர்ந்து, சோமசூரிய தொம்பேயில் அவர் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டிற்கு கூட்டிச் செல்லப்பட்டு, அங்கு சில்வாவினால் அவருக்கு சொல்லப்பட்ட அனைத்திற்கும் இணங்குவதற்கு தான் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் இது காணொளியில் பதிவு செய்யப்பட்டதாகவும் கூறினார்.<br><br>"பின்னர், தான் கல்கிசை நீதவான் நீதிமன்றின் நீதவான் லோச்சன அபேவிக்கிரம அவர்கள் முன், சில்வாவின் அறிவுறுத்தல்களின் படி நொயரின் ஆட்கடத்தல் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்கு கூட்டிச் செல்லப்பட்டேன். அங்கு நீதவான் அபேவிக்கிரமவிடம், நான் அந்த சம்பவத்துடன் சம்பந்தப்படவில்லையெனவும் தான் ராஜபக்சவினாலோ அல்லது புளத்வத்தவினாலோ அவ்வாறு செய்வதற்கு அறிவுறுத்தப்படவில்லையெனத் தெரிவித்ததாகவும்", அவர் மேலும் கூறினார். எனினும், தான் சில்வாவிடம் தான் அவரது அறிவுறுத்தல்களின் படியே நடந்து கொண்டதாகத் தெரிவித்ததாகக், கூறினார். |

| **5. 'காணமற் போன பதினொருவர்': 11 இளைஞர்களின் ஆட்கடத்தல், 2008/09** | |
|---|---|
| 23 செப்டம்பர் 2018 | கடற்படையால் மேற்கொள்ளப்பட்டதான ஆட்கடத்தல் வழக்கில் சி.ஐ.டி சாட்சி, லெப்டினட். கொமாண்டர் கிருஷான் வெலகெதர, வழக்கை எதிர்கொள்கிறார். |
| 14 ஜூன் 2019 | 11 இளைஞர்களின் ஆட்கடத்தல் வழக்கில் இரண்டு சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை செய்யப்படுகின்றனர். |
| 7 ஜூலை 2019 | கடற்படை ஆட்கடத்தல் வழக்கை விசாரணை செய்யும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் (சி.ஐ.டி) புலன்விசாரணையாளர்கள், கடத்தப்பட்ட இளைஞர்கள் பற்றி அறிந்திருந்ததை முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரணகொட ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்தனர். |
| 7 ஆகஸ்ட் 2019 | 2008-2009 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு மற்றும் சட்ட விரோதமாக அவரது புலனாய்வு உத்தியோகத்தர்களால் தடுத்து வைக்கப்பட்டு கொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஒரு சந்தேக நபரான, வசந்த கரணகொடவை, ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன கடற்படையின் அட்மிரல் தரத்திற்கு பதவி உயர்த்துகிறார். |
| 21 ஆகஸ்ட் 2019 | 11 இளைஞர்களின் ஆட்கடத்தல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களின் பதவி உயர்வானது பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மனவருத்தம் அளிப்பதாக நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது. வழக்கு கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்ற நீதிபதி ரங்க தசநாயக்க முன்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் புலன்விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா, |

| | |
|---|---|
| | பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்கப்படல் வேண்டுமெனத் தெரிவித்தார். |
| 22 ஜனவரி 2020 | கடற்படை முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரணகொட, ரியர் அட்மிரல் D.K.P.தசநாயக்க மற்றும் R.K.சுமித் ரணசிங்க ஆகியோர், தங்களுக்கெதிராக நிரந்தர மேல் நீதிமன்ற நீதாய (Trial – at – Bar) விளக்கத்தில் மேற்கொள்ளப்படும் வழக்கு, பொய்க் குற்றச்சாட்டுகள் மற்றும் புனையப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவித்து, விசாரணை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளைத் தாக்கல் செய்தனர். |
| 28 ஜனவரி 2020 | முன்னைய ஆட்சிக்கால நிர்வாகத்தின் கீழ் (2015-2019) பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு (Pcol) குறித்த முறைப்பாடு தொடர்பாக ஒரு முடிவினை எட்டும் வரை முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரணகொட மற்றும் முன்னாள் கடற்படைப் பேச்சாளர் D.K.P தசநாயக்க ஆகியோருக்கு எதிரான வழக்கினை முன்னெடுக்க வேண்டாமென சட்டமா அதிபருக்கு கட்டளையிட்டது. |
| 29 ஜனவரி 2020 | 2008 மற்றும் 2009 இல் பதினொரு ஆட்களின் கடத்தல் தொடர்பான அவரது சட்டபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு சட்டமா அதிபருக்கு கட்டளையிடுவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு நியதிச்சட்ட அல்லது சட்ட ரீதியான அதிகாரம் இல்லையென, சட்டமா அதிபர் தப்புல டி லிவெரா ஆணைக்குழுவிற்கு அறிவித்தார். |
| 7 பிப்ரவரி 2020 | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் (மா.கொ.நி) அதனுடைய நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களும் 8 ஜனவரி 2015 திகதியிலிருந்து தொடங்கி 16 நவம்பர் 2019 திகதி முடிவு வரையான காலப்பகுதியின் போதான அரசியல் பழிவாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள சில அதிகாரங்களை சவாலுக்குட்படுத்தி ஓர் அடிப்படை உரிமைகள் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.<br><br>2008/2009 காலப் பகுதியில் கொழும்பில் காணாமற் போன இளைஞர்கள் தொடர்பாக மூன்றாவது தடவையாக கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரணகொடவிற்கு அழைப்பாணைகள் விடுக்கப்பட்டது. |
| 17-18 பிப்ரவரி 2020 | அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரணகொடவிற்கு அழைப்பாணை விடுத்ததுடன், அவர் ஆணைக்குழு முன் தோன்றினார். ரியர் அட்மிரல் D.K.P. தசநாயக்கவும் அவர் தாக்கல் செய்த முறைப்பாட்டின் மீது சாட்சியமளிப்பதற்கு ஆணைக்குழு முன் தோன்றினார்.<br><br>விசாரணை ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கையில், முன்னைய அரசாங்கத்தின் காலப்பகுதியில் சாட்சிகள் மீது முறையற்ற செல்வாக்கினை ஊக்குவிப்பதன் மூலமாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் தனக்கும் எதிராக பல்வேறு குற்றவியல் குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவித்தார்.<br><br>குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி |

| | |
|---|---|
| | அபேசேகர மற்றும் பரிசோதகர் நிஷாந்த சில்வா ஆகியோர் முன்னைய அரசாங்கத்தின் கட்டளைப்படி யுத்த வீரர்களைக் குறி வைத்து வேட்டையாடியதாக அவர் தெரிவித்தார். அத்தகைய நடவடிக்கை தேசிய பாதுகாப்பு மீது கடுமையான தாக்கங்களைக் கொண்டிருந்ததாகவும் அதன் விளைவாக நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் கூறினார்.<br><br>பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை விடுவிப்பதற்கான இராணுவ நடவடிக்கைகளின் போது இலங்கை இராணுவம் யுத்தக் குற்றங்களைப் புரிந்ததாக ஏற்றுக்கொண்டு ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்துடன் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஓர் உடன்படிக்கையை எட்டியிருந்ததாக கரணகொட குற்றஞ்சாட்டினார். பயங்கரவாதிகளுக்கெதிரான போரில் ஈடுபட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அப்போரில் ஈடுபட்ட ஏனைய முக்கியமானவர்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை முன்கொண்டு வந்து நிறுத்துவதற்கு முன்னைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அவர் சாட்சியமளித்தார். |
| 24 பிப்ரவரி 2020 | 2008 மற்றும் 2009 காலப் பகுதியில் பதினொரு ஆட்களின் ஆட்கடத்தல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பகர்வுகளுடன் சம்பந்தப்பட்ட கடற்படை முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரணகொடவிற்கு அழைப்பாணைகளை மீள வழங்குவதற்கு நான்காவது தடவையாக, கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதாயம் கட்டளையிட்டது.<br><br>விசாரணை ஆணைக்குழுவின் முன் ரியர் அட்மிரல் D.K.P. தசநாயக்க சாட்சியமளித்தார்.<br><br>ஐக்கிய அமெரிக்காவில் பயங்கரவாதத்தை எதிர்த்தல் தொடர்பான பட்டப்பின் படிப்பு முதுமாணிக் கற்கை நெறியை தான் பின்பற்றும் போது, நல்லாட்சி அரசாங்கம் அவரை நாட்டுக்கு திரும்பவும் கொண்டு வராது விட்டிருப்பின், நாட்டில் 21 ஏப்பிரல் பயங்கரவாதத் தாக்குதல்கள் ஏற்படுவதிலிருந்து தடுப்பதற்கு தான் சேவையாற்றியிருப்பேன். தான் 14 செப்டம்பர் 2014 அன்று நாட்டை விட்டு ஐக்கிய அமெரிக்காவிற்கு பயங்கரவாதத்திற்கு எதிரான பட்டப்பின் படிப்புக் கற்கை நெறியை தொடருவதற்காகச் சென்றேன், எனது கற்றை நெறி இஸ்லாமியத் தீவிரவாதத்தை எதிர்த்தல் தொடர்பான ஒரு முக்கியமான பாடத்தைக் கொண்டிருந்தது, என தசநாயக்க தெரிவித்தார்.<br><br>அவர் மேலும் கூறுகையில், நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்ததும், அச்சமயத்தில் பாதுகாப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தை அடுத்து, அப்போதைய பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தல்களின்படி நாடு திரும்புவதற்கு தனக்கு அப்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா அறிவித்ததாக தெரிவித்தார். 14 நாட்கள் கல்வி விடுமுறையில் நாடு திரும்பியதாகவும், 2008 மற்றும் 2009 காலப் பகுதியில் 11 இளைஞர்களின் ஆட்கடத்தல் மற்றும் வலிந்து காணாமற்போதல் தொடர்பாக ஒரு வாக்குமூலம் அளிப்பதற்கு 19 பிப்ரவரி 2015 அன்று குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு வருகை தருவதற்கு கேட்கப்பட்டிருந்ததாகவும் தசநாயக்க கூறினார்.<br><br>வாக்குமூலத்தைப் பெறுவதற்குப் பதிலாக, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி, நிஷாந்த சில்வா ஒரு பிரேரணையைத் |

| | |
|---|---|
| | தாக்கல் செய்து தனக்கு எதிராக வெளிநாட்டுப் பிரயாணத் தடையைப் பெற்றதாக தசநாயக்க தெரிவித்தார். பிரயாணத் தடையை நீக்குவதற்கு தான் பல தடவைகள் கோரிக்கைகள் மேற்கொண்ட போதிலும், நீதிமன்றம் அவற்றை நிராகரித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார். இந்நிலைமை தன்னோடு ஐக்கிய அமெரிக்காவில் தங்கியிருந்த மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுக்கும் கடுமையான மனவழுத்தத்தை ஏற்படுத்தியது, என்றார் அவர்.<br><br>அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து தன்னை ஒரு அரச தரப்புச் சாட்சியாக்குவதற்கு குற்றவியல் திணைக்களத்தின் நிஷாந்த சில்வா முயற்சித்ததாக தசநாயக்க கூறினார். முன்னாள் கடற்படைத் தளபதியும், தற்போது கடற்படை அட்மிரலுமான வசந்த கரணகொட மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், தற்போதைய ஜனாதிபதி ஆகியோரின் கீழ், "கோட்டா" என்ற சங்கேதப் பெயரைப் பாவித்து அந்த முகாம் இயங்கியதாகத் தெரிவிக்கும்படி சில்வா தனக்கு அழுத்தம் கொடுத்ததாக, தசநாயக்க மேலும் கூறினார். |
| 3 மார்ச் 2020 | ரியர் அட்மிரல் தசநாயக்க சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்கிடையிலான தொலைபேசி உரையாடல்களின் குரல் பதிவுகள் இரண்டை ஆணைக்குழுவில் சமர்ப்பித்தார். எதிராளிகளுக்கு ஆஜராகும் வழக்கறிஞர்கள், அன்றைய தினம் ஆணைக்குழு முன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் B.S. திசேரா ஆஜராக மாட்டார் என ஆணைக்குழுவிற்குத் தெரிவித்தனர். |
| 24 ஜூன் 2020 | கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரணகொட அவருக்கெதிராக கொழும்பு மேல் நீதிமன்ற நீதாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பகர்வுகளை சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு எழுத்து மனுவைத் (writ petition) தாக்கல் செய்தார். |
| 25 ஜூன் 2020 | அட்மிரல் வசந்த கரணகொடவிற்கு எதிராக '11 இளைஞர் ஆட்கடத்தல் வழக்கை' விசாரிப்பதிலிருந்து தடைசெய்யும் இடைக்காலத் தடையுத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியது. |
| 1 ஜூலை 2020 | ரியர் அட்மிரல் D.K.P.தசநாயக்க விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டார்.<br><br>ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன் தோன்றிய ரியர் அட்மிரல் தசநாயக்க, 11 இளைஞர்களின் ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போதல்கள் தொடர்பாக அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்பட்ட தனது கைது, தான் பணியினின்றும் இடைநிறுத்தப்பட்டிருக்காவிடின் பெற்றிருந்திருக்கக்கூடிய பல பதவியுயர்வுகளுக்கு தடையாக அமைந்தது எனவும், தான் கடற்படைத் தளபதியாகக் கூட நியமிக்கப்படக்கூடிய ஒரு சாத்தியம் அங்கிருந்ததாகத் தெரிவித்தார். தனது முறைப்பாட்டில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்ட இந்த நபர்கள் தன்னைக் கடற்படை தலைமை அலுவலகத்திலிருந்து இடம் மாற்றி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இரண்டு வருடங்களுக்கு சேவையாற்றுவதற்கு முன்னர் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்கள் எனவும், தான் நிறைவேற்ற ஆணைப்படுத்தப்பட்டவற்றுக்கு வெளியே கடமைகளை நிறைவேற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதால் அதுவும் கூட தனது தொழில் மற்றும் மதிப்பு ஆகிய இரண்டையும் பாதித்தது என்றும்அவர் கூறினார்.<br><br>தனக்கு எதிராக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட ஜூலை 2017 காலப் |

| | |
|---|---|
| | பகுதியில், தான் ஒரு கொமாண்டர் தர நிலைக்கு பதவி உயர்த்தப்படுவதற்கு இருந்தாரெனவும், புலன்விசாரணைகள் உரிய பதவி உயர்வினைப் பாதிக்காது என சட்டமா அதிபர் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு அறிக்கை விட்டிருந்த போதிலும் கூட,சி.ஐ.டி இனரால் மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணைகள் காரணமாக தனது பதவியுயர்வு தடைப்பட்டது என தசநாயக்க கூறினார். தசநாயக்க பின்னர் ஒரு தற்காலிக கொமாண்டராக நியமிக்கப்பட்டார். காணாமற் போன ஆட்கள் அலுவலகமும் கூட, 17 ஜனவரி 2019 அன்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவிற்கு, தனக்கு எதிராக ஒரு வழக்கு நிலுவையிலுள்ளதால் தான் பதவியுயர்த்தப்படக் கூடாது எனப் பரிந்துரைகளை அனுப்பியதாக, தசநாயக்க மேலும் தெரிவித்தார்.<br><br>சம்பவம் இடம் பெற்ற காலப்பகுதியின் போது வழக்கின் இரண்டு பிரதான சந்தேக நபர்களான கொமாண்டர் சுமித் ரணசிங்க மற்றும் லெப்டினண்ட் பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோர்களின் மேற்பார்வை அதிகாரியாக தான் இருந்தேன் என்பதே, தனக்கு எதிராக சி.ஐ.டி கொண்டு வந்த பிரதான சாட்சியம் என தசநாயக்க மேலும் தெரிவித்தார். எனினும் தான் அவர்களது மேற்பார்வை அதிகாரியாக செயற்படவில்லையென தசநாயக்க குறிப்பிட்டார். ரியர் அட்மிரல் தசநாயக்கவிற்காகத் தோன்றிய சட்டத்தரணி சம்பவம் இடம்பெற்ற காலத்தில் தசநாயக்க மேற்பார்வை அதிகாரியாக செயற்படவில்லை என்பதை நிரூபிக்கும் கடற்படை தலைமை அலுவலகத்திலிருந்தான ஒரு கடிதத்தை சமர்ப்பித்தார்.<br><br>சி.ஐ.டி இன் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா ஒரு சட்ட ரீதியற்ற முறையில் புலன்விசாரணை தொடர்பான தகவல்களை வழக்கு நடவடிக்கைகளுக்கு முன்னதாகவே பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு வழங்கியதாகவும், சி.ஐ.டி. இன் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர கூட இந்த வழக்குத் தொடர்பாக ராமநாயக்கவுடன் உரையாடல்களை மேற்கொண்டிருந்ததாகவும் தசநாயக்க மேலும் தெரிவித்தார். |
| 03 ஜுலை 2020 | ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில், இந்த ஆட்கடத்தல் வழக்கில், அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரணகொட ஆகியோர் மீது குற்றஞ் சுமத்துவதற்கு தன்னை ஒரு சாட்சியாக உபயோகிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக தசநாயக்க தெரிவித்தார். இந்த முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர், பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் தான் குற்றம் சுமத்தப்பட்டதாக அவர் கூறினார்.<br><br>முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரணகொட யுத்தக் குற்றங்களைப் புரிந்தார்கள் என நிரூபிப்பதற்கு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் புலன்விசாரணை அணியினர் முயற்சித்தனர் எனவும் அவர் கூறினார். கடற்படை முன்னாள் தளபதி டிரவீஸ் சின்னையாவினால் வழங்கப்பட்ட தவறான போலிச் சாட்சியத்தின் பேரில் தான் கைது செய்யப்பட்டதாகவும் தசநாயக்க தெரிவித்தார்.<br><br>ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவரான, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர், நீதிபதி உபாலி அபேரட்ண முறைப்பாட்டில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான |

| | |
|---|---|
| | ரஞ்சன் ராமநாயக்க, Dr. ராஜித சேனாரத்ன, D.M.சுவாமிநாதன், ரஞ்சித் மத்தும பண்டார, அஜித் P.பெரேரா, மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ரவி வைத்தியலங்கார மற்றும் ரவி செனவிரத்ன, ஜனாதிபதி சட்டத்தரணி J.C. வெலியமுன ஆகியோருக்கு அழைப்பாணை அறிவித்தல்களை அனுப்புவதற்கு அறிவுறுத்தல் வழங்கினார். |
| 10 ஆகஸ்ட் 2020 | முன்னாள் அமைச்சர்களான ரஞ்சித் மத்தும பண்டார, ராஜித சேனாரட்ன, அஜித் பி. பெரேரா மற்றும் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் விசாரணை ஆணைக்குழு முன் தோன்றினர். |
| 26 ஆகஸ்ட் 2020 | குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர மற்றும் பா.உ. ரஞ்சன் ராமநாயக்க விசாரணை ஆணைக்குழு முன் சாட்சியமளிப்பதற்கு மேலும் கால அவகாசத்திற்கு வேண்டிக் கொண்டனர்.<br><br>இதே வேளை, உள்நாட்டலுவல்கள் அமைச்சில் 2018 இல் ரஞ்சன் ராமநாயக்க உட்பட அரசியல்வாதிகளின் பிரசன்னத்தில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் 11 இளைஞர்களின் ஆட்கடத்தல் மற்றும் காணாமற் போதல் தொடர்பான புலன்விசாரணையில் முகங்கொடுத்த முட்டுக்கட்டைகள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த காரணத்தினால் அதே முறைப்பாட்டில் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டிருந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன் தோன்றி, குறித்த கூட்டத்தில் அரசியல்வாதிகள் பிரசன்னமாகியிருந்த போதிலும் கூட, தான் தனது கடமைகளின் அடிப்படையிலேயே முட்டுக்கட்டைகள் பற்றி பேசியதாகக் கூறினார்.<br><br>அவ்வாறு முட்டுக்கட்டைகள் இருந்திருந்தால், அவை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமெனவும், மேலும் அவசியமாக இருந்திருப்பின், சட்டமா அதிபரிடமிருந்து ஒரு அபிப்பிராயம் கோரப்பட்டிருக்க வேண்டுமெனவும், ஆனால் செனவிரத்ன அதற்குப் பதிலாக அரசியல்வாதிகளின் மத்தியில் வழக்கைப் பற்றிப் பிரஸ்தாபித்தார் என, தசநாயக்கவின் வழக்கறிஞர் கூறினார். கூட்டத்தில் பேசும் போது செனவிரத்ன, அச்சமயம் கடற்படை தலைமையகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தசநாயக்க அங்கே தொடர்ந்தும் பணியாற்றி வந்தால், அது விசாரணைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்குமெனக் குறிப்பிட்டதாகவும், அதனைத் தொடர்ந்தே தசநாயக்க இடம் மாற்றப்பட்டதாகவும், வழக்கறிஞர் குறிப்பிட்டார். குறித்த வழக்கின் சாட்சிகளும் கூட அதே தலைமையலுவலகத்தில் பணியாற்றியதினால் தசநாயக்க கடற்படை தலைமையலுவலகத்தில் தொடர்ந்திருப்பது ஒரு முட்டுக்கட்டையென, செனவிரத்ன குறிப்பிட்டார். |
| 15 செப்டம்பர் 2020 | கொமாண்டர் R.K.சுமித் ரணசிங்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில், சி.ஐ.டி.முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா, மற்றும் ஏனைய பல உத்தியோகத்தர்கள் நல்லாட்சி அரசாங்க காலத்தின் போது புனையப்பட்ட சான்றுகளை சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்ததாகக் கூறினார்.<br><br>ஏனைய பலருடன் மேற்கொள்ளப்பட்ட தனது கைதானது,யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்த அரசியல் தலைமைத்துவத்திற்கு, அது யுத்தக் குற்றங்களைப் புரிந்ததாகக் கோரி, உள்நாட்டிலும் மற்றும் சர்வதேசத்திலும், அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காக, சம்பவத்தை விசாரணை செய்த குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சதியின் விளைவாகும் என அவர் கூறினார்.<br><br>கொமாண்டர் R.K. சுமித் ரணசிங்க, அச்சமயத்தில் இலங்கை கடற்படையில் |

| | |
|---|---|
| | இருந்த லெப்டினன்ட் கொமாண்டர் வெலகெதர என அறியப்பட்ட ஒருவர் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு ஆட்கடத்துவதில் ஈடுபட்டதாக தகவல் கிடைக்கப் பெற்றதன் பின்னர், அந்நபர் தொடர்பாக தான் புலன்விசாரணை செய்ததாகத் தெரிவித்தார். 'அதன் பின்னர் அவர் எனக்கு எதிராக வன்மத்துடன் செயற்பட்டதாக' ரணசிங்க கூறினார்.நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் லெப்டினன்ட் கொமாண்டர் வெலகெதர தனக்கு எதிராகப் போலியான சாட்சியங்களைப் புனைந்து வந்ததாக ரணசிங்க கூறினார். |

| **6. லசந்த விக்கிரமதுங்க படுகொலை, 2009** | |
|---|---|
| 4 ஏப்பிரல் 2019 | மகள் அஹிம்சா விக்கிரமதுங்கவினால் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவில் சிவில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. |
| 21 ஒக்டோபர் 2019 | இலங்கை பொதுஜன பெரமுனக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரான கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் தாக்கல் செய்த வழக்கு ஐக்கிய அமெரிக்கா கலிபோர்ணியா மாநில நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 13 நவம்பர் 2019 | இலங்கையின் முன்னணி பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான வழக்கில் இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிற்கு விடுபாட்டுரிமையை வழங்கிய ஐக்கிய அமெரிக்கா மாநில நீதிமன்றத்தின் தீர்மானத்தை எதிர்த்து அஹிம்சா விக்கிரமதுங்க மற்றும் அவரது வழக்கறிஞர் குழுவினர் மேன்முறையீட்டுக்கான ஒரு அறிவித்தலை அமெரிக்க ஒன்பதாம் வட்டச்சுற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் (Ninth Circuit Court of Appeal) தாக்கல் செய்தனர். |
| 16 நவம்பர் 2019 | கோத்தபாய ராஜபக்ச இலங்கையின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்களில் அவருக்கெதிராக ஒரு மேன்முறையீடு நிலுவையில் இருக்கையில் முதல் தடவையாக ஒரு வெளிநாட்டு அரச தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ராஜபக்ச இப்பொழுது அரச தலைவருக்கான தண்டனை விடுபாட்டுரிமைக்கு உரித்துடையவராவர். |
| 20 டிசம்பர் 2019 | அஹிம்சா விக்கிரமதுங்க மற்றும் அவரது வழக்கறிஞர் குழு முறையீட்டை தள்ளுபடி செய்யவும் மற்றும் ஒரு மேன் முறையீட்டின் நடுவில் வழக்கொன்று பொருத்தப்பாடற்றதாக வரும்போது கீழ்நிலை நீதிமன்றத்தின் தீர்மானத்தை வெறிதாக்க அனுமதிக்கும் முன்சிங்வியர் (Munsingwear) கோட்பாட்டின் கீழ் அடிப்படைத் தீர்மானத்தை வெறிதாக்குவதற்கு ஒரு மனுவைத் தாக்கல் செய்தனர். |
| 15 பிப்ரவரி 2020 | பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான சாட்சியங்களை மறைப்புச் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது தொடர்பில் கொழும்பு தெற்குப் பிரிவின் பொறுப்பதிகாரி முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார மீது விதிக்கப்பட்டிருந்த பிரயாணத் தடையை கல்கிசை நீதவான் நீதிமன்றம் நீக்கியது. |
| 21 பிப்ரவரி 2020 | கைது செய்யப்படுவதிலிருந்து தப்புவதற்கு உதயங்க வீரத்துங்கவிற்கு உதவ முயற்சித்ததிற்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் W.திலகரட்னவிற்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சுமத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் அஹிம்சா விக்கிரமத்துங்க முறைப்பாடு ஒன்றினைத் தாக்கல் செய்தார். |

| | |
|---|---|
| 02 மார்ச் 2020 | கடந்த நவம்பரில் இலங்கை ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்சவின் பதவியேற்றமை அவர் ஜனாதிபதியாக இருக்கும் வரை அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குகளிலிருந்து விடுபாட்டுரிமையை அளிப்பதினால் முன்முடிவு ஏதுமின்றி வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கான அஹிம்சா விக்கிரமதுங்கவின் வேண்டுகோளிற்கு ஒன்பதாம் வட்டச்சுற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.<br><br>நாட்டின் ஒரு தலைவராக தண்டனை விடுபாட்டுரிமையை அனுபவிக்காத ஒரு சந்தர்ப்பத்தில் ராஜபக்சவிற்கு எதிராக எதிர்காலத்தில் வழக்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கான வழியை ஒன்பதாம் வட்டச்சுற்றின் தீர்மானம் தெளிவுபடுத்தியது. |
| 18 ஜூன் 2020 | குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் (சி.ஐ.டி) பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் A.R.P.J.அல்விஸ் என்பவரின் நியமனத்தை நிறுத்துவதற்கு மறைந்த பத்திரிகையாளரும், ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்கவின் புதல்வி அஹிம்சா விக்கிரமதுங்க பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முறையீடு செய்தார். தனது தந்தையின் கொலை தொடர்பில் அல்விஸ் கைது செய்யப்படுவதற்கு உத்தரவிடப்பட்டதால், அத்தகையதொரு உயர் பதவிக்கு அவர் பொருத்தமானவரல்ல எனக் கூறி, அஹிம்சா விக்கிரமதுங்க ஓர் அறிக்கையை வெளியிட்டார். |
| 22 ஜூன் 2020 | தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டவாறு, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அண்மையில் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் A.R.P.J. அல்விஸ் பற்றிய ஒரு அறிக்கையை பதில் பொலிஸ்மா அதிபர் சமர்ப்பிப்பதற்கு பணிக்கப்பட்டார். |
| 28 ஒக்டோபர் 2020 | அரசியல் பழிவாங்கல் சம்பவங்களை விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கான தனது சாட்சியத்தில், ஒரு முன்னாள் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தரான, பிரேமானந்த உடலகம, பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான புலன்விசாரணைகளில் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்தியுள்ளது எனத் தெரிவித்தார். |
| 4 டிசம்பர் 2020 | மறைந்த சிரேஷ்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கல்கிசை நீதிவான் நீதிமன்றினால் 4 ஜூன் 2021 இற்கு பிற்போடப்பட்டது. குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திலிருந்து உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருந்த போதிலும், சட்டமா அதிபர் திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் சமூகமளிக்கவில்லை. |
| 8 ஜனவரி 2021 | லசந்த விக்கிரமதுங்கவின் மகள், தனது தந்தையின் கொலை விசாரணையில் உதவி நாடி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்தார். |

**7. பிரகீத் எக்னலிகொடவின் காணாமற் போதல், 2010**

| | |
|---|---|
| 23 மே 2019 | பொது பல சேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு அளிக்கிறார். |
| 25 மே 2019 | காணாமற்போன பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி, சந்தியா எக்னலிகொட பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் விடுதலையின் பின் தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் பாதுகாப்புக் கோரி பிரதம மந்திரி ரணில் |

| | |
|---|---|
| | விக்கிரமசிங்கவிற்கு எழுதுகிறார். |
| 24 ஜூன் 2019 | கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பளிக்கும் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கெதிராக சந்தியா எக்னலிகொட ஓர் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்தார். |
| 10 செப்டம்பர் 2019 | டிசம்பர் 5 ஆம் திகதியன்று கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பளிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவின் தீர்மானத்திற்கு எதிராக சந்தியா எக்னலிகொட மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. |
| 6 நவம்பர் 2019 | நவம்பர் 17 ஆம் திகதி தான் அதிகாரத்திற்கு வந்தவுடனேயே புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவ வீரர்களை தடுப்புக் காவலிலிருந்து விடுவிப்பேன் எனத் தெரிவித்து, அநுராதபுரத்தில் தேர்தல் பிரச்சார மேடையில் பொதுஜனப் பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவினால் மேற்கொள்ளப்பட்ட உரை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரிடம், காணாமற்போன பத்திரிகையாளர் பிரதீப் எக்னலிகொடவின் மனைவி, சந்தியா எக்னலிகொட ஒரு முறைப்பாட்டினை மேற்கொள்கிறார். |
| 27 நவம்பர் 2019 | நிரந்தர மேல் நீதிமன்ற நீதாயம் முன்பாக, பிரகீத் எக்னலிகொடவின் காணாமற்போதலில் சம்பந்தப்பட்டவர்களாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒன்பது சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பகர்வுப் பத்திரங்களை சட்டமா அதிபர் தபுல்ல டி லிவேரா தாக்கல் செய்கிறார்.<br><br>2010, ஜனவரி 25 – 27 இடையிலான ஒரு காலப்பகுதியின் போது பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் 'கடத்தல் மற்றும் கொலை செய்தலுக்கு சதி செய்தமை' குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஒன்பது இராணுவ உத்தியோகத்தர்கள் மீதான குற்றப்பகர்வுப் பத்திரங்களை கொழும்பு விசேட நீதாயம் சேர்ப்பித்தது.<br><br>குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் முன்னைய பிணை நிபந்தனைகளை (மேல் நீதிமன்ற விசாரணையின் போதான) இது வரை மீறாத காரணத்தால் பிணை வழங்குதல் தொடர்பாக வழக்குத் தொடருனர் தரப்பு ஆட்சேபனை தெரிவிக்காமையினால், விசேட நீதாயம் குற்றஞ் சாட்டப்பட்டவர்களை முன்னைய பிணை நிபந்தனைகளின் கீழ் பின்னர் விடுவித்தது. எனினும், நீதிமன்றம் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீது பிரயாணத் தடையை விதித்ததுடன், அவர்கள் தங்களின் கடவுச்சீட்டுகளை நீதிமன்றத்திடம் கையளிப்பதற்கு உத்தரவிட்டது. |
| 18 டிசம்பர் 2019 | நிரந்தர மேல் நீதிமன்ற நீதாயம் இன்று 9 புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சியங்களின் பரிசோதித்தலை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்ததுடன் சாட்சிகள் மீது அழைப்பாணைகளை விடுத்தது. |
| 31 டிசம்பர் 2019 | காணாமற்போன கேலிச் சித்திரக் கலைஞர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி, சந்தியா எக்னலிகொட, வழக்குடன் சம்பந்தப்பட்ட சாட்சிகள் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்களால் மிரட்டப்படுவதாகத் தெரிவித்தார். அவரது கணவரின் காணமற் போதலுடன் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களை சம்பந்தப்படுத்தும் கூற்றுகளையும் அவர் மறுத்ததுடன், நீதிச் செயல் முறைகளை தனது செல்வாக்குக்கு உட்படுத்த வேண்டாமென புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிடம் வேண்டுகோள் விடுத்தார். |
| 20 ஜனவரி 2020 | கொழும்பு மேல் நீதிமன்றம் எக்னலிகொட கடத்தல் வழக்கை பிப்ரவரி 6 |

| | |
|---|---|
| | ஆம் திகதி வரை பிற்போடுவதற்கு உத்தரவிட்டது. |
| 6 பிப்ரவரி 2020 | பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போதல் சம்பவத்தில் குற்றஞ் சாட்டப்பட்ட ஒன்பது இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை பிப்ரவரி 13 ஆம் திகதி விசாரிப்பதற்கு விசேட மேல் நீதிமன்ற நீதாயம் உத்தரவிட்டது. |
| 13 பிப்ரவரி 2020 | கொழும்பு மேல் நீதிமன்ற நீதாயம் பிரகீத் எக்னலிகொட ஆட்கடத்தல் வழக்கை 20 பிப்ரவரி 2020 அன்று விளக்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்குத் தீர்மானித்தது. |
| 20 பிப்ரவரி 2020 | பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் ஆட்கடத்தல் மற்றும் படுகொலை செய்தமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சியங்களை ஆராய்தல் கொழும்பில் நிரந்தர மேல் நீதிமன்ற நீதாயத்தில் மார்ச் 11 ஆம் திகதி அன்று ஆரம்பிப்பதற்கு தேதி குறிக்கப்பட்டது. |
| 11 மார்ச் 2020 | பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் ஆட்கடத்தல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிராளிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட ஒன்பது சந்தேக நபர்களும் தங்களுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தாங்கள் குற்றமற்றவர்கள் எனத் தெரிவித்தனர்.<br><br>வழக்கில் வழக்குத் தொடருனருக்காக சட்டமா அதிபர் சார்பில் தோன்றிய பிரதி மன்றாடியார் அதிபதி சுதர்ஷன டி சில்வா, வேறொரு உத்தியோகபூர்வ கடமை காரணமாக வெளியே சென்றிருப்பதின் காரணமாக நீதிமன்றத்தில் பிரதி மன்றாடியார் அதிபதி டிலிப்ப பீரிஸ் இன்று தோன்றுவதற்கு இயலாததினால் வழக்கின் விளக்கத்தை மார்ச் 16 வரை தள்ளி வைக்குமாறு நீதிமன்றத்தை வேண்டினார். வழக்கில் நான்காவது சாட்சியாக பெயரிடப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் (LTTE) போராளி, சுமதிபால சுரேஸ் குமாரிற்கு அழைப்பாணையொன்றை விடுப்பதற்கும் நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டார். குமார் தற்போது பாரிஸில் காவலில் உள்ளார், அவர் நாடு கடத்தப்படும் பட்சத்தில், பண்டாரநாயக்க விமான நிலையத்தில் பொலிசார் அவரைக் கைது செய்வதற்கு ஏதுவாக நீதிமன்ற அழைப்பாணை கோரப்பட்டது.<br><br>வழக்கின் முதலாவது சாட்சியும் மறைந்த பத்திரிகையாளரின் மனைவியுமான சந்தியா எக்னலிகொடவை மார்ச் 16 ஆம் திகதி சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்குமான ஒரு அறிவித்தல் விடுக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 13 மார்ச் 2020 | பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் ஆட்கடத்தல் மற்றும் படுகொலையுடன் தொடர்புடையதான ஒன்பது இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் சுமதிபால சுரேஸ் குமார் அல்லது ரவீந்திரனின் கைது செய்தலுக்கான பிடியாணையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (12) விடுத்தது.<br><br>சாட்சியான சுரேஸ் குமார் பிரான்ஸ் தேசத்தில் சட்ட விரோதமாகத் தங்கியுள்ளார் எனவும் அவரை நாட்டிற்கு திரும்ப அழைப்பதில் வழக்குத் தொடரும் தரப்பு தவறிவிட்டதாக சட்டமா அதிபர் சார்பில் தோன்றிய பிரதி மன்றாடியார் அதிபதி சுதர்ஷன டி சில்வா மன்றுக்குத் தெரிவித்தார். |
| 15 ஜுலை 2020 | பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவின் ஆட்கடத்தல் மற்றும் வலிந்து காணாமற் போதல் வழக்கின் எதிராளிகள் இருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. |

| | |
|---|---|
| | இந்த அடிப்படை மனித உரிமை மனுக்கள் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் லெப்டினண்ட் கேர்ணல் எரந்த்த பீரிஸ் மற்றும் கோப்ரல் S.K.உலகெதர ஆகியோரால், எக்னலிகொடவின் கடத்தல் மற்றும் கொலைக் குற்றச்சாட்டில் தங்களைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது எனக் கோரித் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.<br><br>பிரதி மன்றாடியார் அதிபதி திலீப்ப பீரிஸ், அடிப்படை ஆட்சேபனைகளை எழுப்பி, குற்றஞ் சாட்டப்பட்ட இருவருக்கும் எதிராக குற்றங்களை நிரூபிப்பதற்கு போதுமான சாட்சியங்கள் அங்கே இருப்பதாக உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு கூறினார். இருவருக்கும் எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொலைபேசிப் பதிவுகள் தொடர்பான அறிக்கை மற்றும் ஏனைய சாட்சியங்களின் பகுப்பாய்தல் மூலமாகக் கண்டறிந்தவற்றின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டன. என அவர் மேலும் தெரிவித்தார். சமர்ப்பணங்களைக் கருத்தில் கொண்டு, நீதியரசர்களின் குழாம் எரந்த்த பீரிஸ் மற்றும் S.K.உலகெதர ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களைத் தள்ளுபடி செய்வதற்கு தீர்மானித்தது. |
| 25 ஆகஸ்ட் 2020 | அரசியல் பழிவாங்கல் விடயங்களின் சம்பவங்களை ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, குற்றவியல் விசாரணைத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா, பொலிஸ் பரிசோதகர் பிரேமதிலக்க மற்றும் சார்ஜண்ட் மென்டிஸ் ஆகியோரை 10 செப்டம்பர் அன்று ஜனாதிபதி ஆணைக்குழு முன் தோன்றுவதற்கு அறிவித்தல்களை விடுத்தது. ஆணைக் குழுவில் கேர்ணல் பிரபோத சிறிவர்தனவால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன. அவரது முறைப்பாடு, பத்திரிகையாளர் பிரதீப் எக்னலிகொடவின் ஆட்கடத்தல் மற்றும் வலிந்து காணாமற்போதல் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் அறிவுறுத்தல்களின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கும்படி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தனக்கு அழுத்தம் கொடுத்தார்கள் எனத் தெரிவித்தது. |
| 19 ஒக்டோபர் 2020 | பொது பல சேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றினால் ஆதாரங்களைப் பாரப்படுத்துவதற்காக தேதி மீள் குறிக்கப்பட்டது. |
| **8. வஸிம் தாஜுடீனின் கொலை, 2012** | |
| 17 மே 2012 | ரகர் விளையாட்டு வீரர் வஸிம் தஜுடீன், கொழும்பு 5, பார்க் வீதியில், சாலிக்கா மண்டபத்திற்கருகில் அவரது எரிந்து கொண்டிருந்த காரில், இறந்து கிடக்கக் காணப்பட்டார். |
| ஏப்பிரல் 2013 | சட்ட மருத்துவ அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகரவினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் முடிவு, இறப்பிற்கு காரணம் தலையில் ஏற்பட்ட காயத்தின் அதீத அதிர்ச்சி மற்றும் காபன் மொனொக்சைட் நச்சுத்தன்மை மற்றும் தீப் பற்றியிருந்தமை என்பவற்றின் கலவையே என சுட்டிக்காட்டியது. |
| ஜூலை 2013 | குறித்த சம்பவம் வீதி விபத்து என பொலிஸ் தீர்மானித்து, சம்பவத்தை மூடியது. |
| மார்ச் 2015 | சி.ஐ.டி புலன்விசாரணையை பொறுப்பேற்றது. |
| 27 ஜூலை | சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை |

| | |
|---|---|
| 2015 | அறிக்கை என்பவற்றுக்கிடையில் முரண்பாடு காணப்பட்டதினால் இவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் விசாரிக்கப்படுதல் வேண்டுமென கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் சி.ஐ.டி குறிப்பிட்டது. தஜுடீன் மரணத்தில் முறைகேடு நடந்திருக்கலாம் என்ற தகவல் வெளிச்சத்திற்கு வந்தது. மேலதிக புலன்விசாரணை மேற்கொள்வதற்கு தஜுடீனின் சடலத்தை மீளவும் தோண்டி எடுப்பதற்கான ஒரு வேண்டுகோளையும் சி.ஐ.டி முன் வைத்தது |
| 6 ஆகஸ்ட் 2015 | சி.ஐ.டி இனால் விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்து, கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் தேசிய ரகர் விளையாட்டு வீரர் வசிம் தஜுடீனின் சடலம் சட்ட மருத்துவ அதிகாரிகளின் குழு, மதகுரு மற்றும் கிராம சேவகர் ஆகியோர் முன்னிலையில் மீள் தோண்டி எடுக்கப்படல் வேண்டுமென ஆகஸ்ட் 6 ஆம் திகதி கட்டளையிட்டதுடன் சடலத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுதல் வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.<br><br>கொலை செய்யப்படுவதற்கு சற்று முன்பதாக தஜுடீனைக் கடத்துவதற்கு உபயோகிக்கப்பட்ட லாண்ட் ரோவர் டிபெண்டர் வாகனம் திருமதி.ஷிராந்தி ராஜபக்சவின் ‘சிரிலிய பவுண்டேஷன்’ எனும் ஸ்தாபனத்தின் உடைமையில் இருந்ததை சான்றுகள் காண்பித்தன. |
| 10 ஆகஸ்ட் 2015 | வசிம் தஜுடீனின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு தடயவியல் நிபுணர்கள் மூவர் அடங்கிய ஒரு விசேட அணியால் புதிதாக பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. |
| செப்டம்பர் 2015 | வசிம் தஜுடீனின் மார்புக் கூடு, மூச்சுக் குழாய் மற்றும் சமச்சீரான முறிவுகள் உடையதாகவிருந்த நீண்ட இரண்டு எலும்புகள் என்பன இறந்த ரக்பி விளையாட்டு வீரரின் உடலின் எச்சங்களிலிருந்து காணாமற் போயிருந்ததை புதிய அறிக்கை கண்டறிந்தது. இறந்தவரின் கீழ் மூட்டுகள், கழுத்து மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் முனைமழுங்கிய ஆயுதங்களால் ஏற்படுத்தப்பட்ட பல உட்காயங்களின் விளைவுகள், அதனைத் தொடர்ந்த தீ மற்றும் பின்னர் வாகனத்தில் ஏற்பட்ட தீயின் பரவுதல் என்பவை மரணத்தை ஏற்படுத்தியதற்கான காரணம் என அறிக்கை முடிவுறுத்தியது. மேலே தரப்பட்ட அனைத்து அவதானிப்புகள் மற்றும் குறிப்புகளையும் கவனத்தில் கொள்ளும் போது, இறந்தவர் விபத்து நடந்த சமயத்தில் அல்லது தீ ஏற்பட்ட சமயத்தில் வாகனத்தை செலுத்தவில்லையென்பதே தங்களது கருத்தாகும். உடல் செயலற்றுப் போன ஒருவர் வேறொரு நபரினால் பயணிகள் இருக்கையில் வைக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியம் அதிகளவில் உள்ளது” என அறிக்கை மேலும் குறிப்பிட்டது. |
| 3 நவம்பர் 2015 | தஜுடீன் வழக்கைத் தீர்ப்பதற்கு துரிதமான நடவடிக்கைகளை எடுத்து வந்த நீதவான் நிஷாந்த பீரிஸ், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் ஜனவரி 1, 2016 இலிருந்து மாத்தறை மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். |
| டிசம்பர் 2015 | சி.சி.ரி.வி (CCTV) காட்சிப் பதிவுகளைப் பகுப்பாய்ந்த பின்னர் ரகர் விளையாட்டு வீரர் வசிம் தஜுடீனின் கொலையில் சம்பந்தப்பட்ட மூன்று நபர்கள் அடையாளங் காணப்பட்டனர். இவர்களுள் இருவர் கடற்படையைச் சேர்ந்த நபர்களாவர். |
| 30 டிசம்பர் 2015 | நீதிச் சேவைகள் ஆணைக்குழு, நீதவான் நிஷாந்த பீரிஸின் இடமாற்ற உத்தரவை இரத்துச் செய்தது. |
| 5 ஜனவரி 2016 | வசிம் தஜுடீனின் கொலை தொடர்பான சி.சி.ரி.வி பதிவுகளை பகுப்பாராய்ந்த கொழும்பு கணினிக் கல்லூரி நிபுணர்கள், சி.சி.ரி.வி பதிவுகள் ஐக்கிய அமெரிக்காவின் FBI ஆய்வுகூட சேவை, கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய தொழில்நுட்ப நிலையம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் மெட்ரோபொலிடன் பொலிஸ் சேவை போன்றவற்றின் |

| | |
|---|---|
| | தடயவியல் ஆய்வு கூடங்களுக்கு நிபுணத்துவ தடயவியல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்படுதல் வேண்டுமெனப் பரிந்துரைத்தனர். |
| 25 பிப்ரவரி 2016 | தஜூடீனின் மரணம் ஒரு கொலையென நீதவான் தீர்மானித்தார். |
| 3 மார்ச் 2016 | கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் ஈ.பி.டி.பி தலைவரும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கொழும்பு 5, பார்க் வீதியில் அமைந்துள்ள அவரது ஒரு அலுவலகத்தின் மே 16, 2012 திகதியன்றுக்கான சி.சி.ரி.வி பதிவுகளின் வன்தட்டுச் சேமிப்பகத்தை கையளிப்பதற்கு கட்டளையிட்டார். |
| ஏப்பிரல் - மே 2016 | கொலை தொடர்பான சாட்சியங்களை மறைப்புச் செய்வதில் அவர்களின் வகிபாகம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட மேல் மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்ட முன்னாள் குற்றவியல் பிரிவுப் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.<br><br>குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலத்தில், நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா, முன்னாள் ரக்பி விளையாட்டு வீரரான வசிம் தஜூடீனின் கொலை தொடர்பாக மேலும் புலன்விசாரணைகளை நடத்த வேண்டாமென உயர் தரத்திலான பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து தான் அறிவுறுத்தல்களைப் பெற்றதாகக் கூறினார். |
| 13 மே 2016 | தஜூடீனின் சடலம் மீது முதலில் பிரேத பரிசோதனை நடத்திய முன்னாள் கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஆனந்த சமரசேகரவினால் வழிநடத்தப்பட்ட சட்ட வைத்திய அதிகாரிகள் குழு மீது குற்றப் பத்திரங்களை இலங்கை மருத்துவ சங்கம் வழங்கியதுடன் விடயத்தை ஓர் ஒழுக்காற்றுக் குழு விசாரிக்குமென, மருத்துவ சங்கம் நீதிமன்றத்திற்கு அறிவித்தது. |
| 20 செப்டம்பர் 2016 | தஜூடீனின் சடல எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவினால் மாலபேயிலுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிக்கு (SAITM) மாற்றப்பட்டதாக சி.ஐ.டி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரவிந்திர விமலசிரி கொழும்பு நீதவான் நிதிமன்றத்திற்குத் தெரிவித்தார். |
| 2 நவம்பர் 2016 | முன்னாள் ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தஜூடீனின் கொலையில் புலன்விசாரணை செய்து வரும் சி.ஐ.டி, கொலை நடந்த இரவு நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி டேமியன் பெரேராவினால் பெறப்பட்ட தொலைபேசி அழைப்புகள் குறித்து ஒரு விரிவான புலன்விசாரணையை அவர்கள் முன்னெடுத்துள்ளதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது. முன்னைய ஒரு சந்தர்ப்பத்தில், நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி டேமியன் பெரேரா, தஜூடீனின் கொலை நடைபெற்ற சாலிக்கா மைதானத்திலிருந்து அன்றைய தினமான மே 17, 2012 இரவு ஜனாதிபதி செயலக அலுவலகத்திற்குச் சொந்தமான தொலைபேசிகளிலிருந்து மூன்று தொலைபேசி அழைப்புகளைப் பெற்றதாக,சி.ஐ.டி கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் அவர்களிடம் தெரிவித்தது. |
| 2 ஜூன் 2017 | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டார். |
| 28 செப்டம்பர் 2017 | நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரிக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து பல தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பு மேலதிக நீதவான் ஜெயராம் ட்ரொஸ்கியிடம் பிரதி மன்றாடியார் அதிபதி டிலான் ரட்நாயக்க தெரிவித்தார். |
| 2 ஒக்டோபர் | முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி புலன்விசாரணையில் மூன்றாவது |

| | |
|---|---|
| 2017 | சந்தேக நபராகப் பெயரிடப்பட்டார். |
| 19 ஒக்டோபர் 2017 | வழக்கில், தஜுடீனின் மரணம் தொடர்பில் பொய்யான பிரேத பரிசோதனை அறிக்கை தயாரித்தமை மற்றும் சாட்சியங்களை அழித்தமை ஆகிய குற்றச் சாட்டுகள் சம்பந்தமாகத் தம்மைக் கைது செய்வதற்கான சி.ஐ.டி இன் நடவடிக்கையை எதிர்பார்த்து கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஆனந்த சமரசேகர, வசிம் தஜுடீனின் கொலை தொடர்பில் நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவர் பிணைக்காக விண்ணப்பித்ததுடன் அவரது உடல் நலக்குறைவு மற்றும் அவர் பெறும் சிகிச்சை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். |
| 26 ஜனவரி 2018 | கொலை சம்பவத்தை உடனடுத்து ஜனாதிபதி செயலகத்திற்கும் (அப்போதைய அரசாங்கத்தின் கீழான) மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிற்குமிடையில் பல தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டதை சி.ஐ.டி புலன்விசாரணைகள் வெளிப்படுத்தின.<br><br>ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தஜுடீனின் கொலை சம்பந்தமாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தின் நெருக்கமான ஒரு தொகை நபர்களிடமிருந்து பல்வேறு வாக்குமூலங்கள் பெற வேண்டியிருப்பது அவசியம் என பிரதி மன்றாடியார் அதிபதி, டிலான் ரட்நாயக்க கொழும்பு மேலதிக நீதவான் தர்ஷிக்க விமலசிரியிடம் தெரிவித்தார். அவர், நீதிமன்றத்தில் பேசும் பொழுது, ராஜபக்ச குடும்ப உறுப்பினர் ஒருவர் குற்றம் நிகழ்ந்த சம்பவ இடத்திற்கு பயணிப்பதற்கு ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்த இரண்டு வாகனங்களை உபயோகித்ததை வெளிப்படுத்தினார். இவ்விரண்டு வாகனங்களும் இலங்கை கடற்படையைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களால் செலுத்தப்பட்டது எனவும் அவ்விரண்டு கடற்படை உறுப்பினர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். |
| ஜ-ன் 2018 | முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தின் பாதுகாப்புத் தொடரணிக்கு பணியில் ஈடுபடுத்தப்பட்ட கடற்படை உத்தியோகத்தர்கள் தொடர்பான விபர அறிக்கைகள் கிடைக்கப் பெறவில்லையென கடற்படை சி.ஐ.டி இற்கு அறிவித்தது. |
| 20 செப்டம்பர் 2018 | இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் சிரிலிய சவிய பவுண்டேஷனிற்கு வழங்கப்பட்ட ஒரு டிபென்டர் வாகனமே தஜுடீனைக் கடத்துவதற்கு உபயோகிக்கப்பட்டதென நம்பத் தகுந்த சாட்சியம் உள்ளதாக கொழும்பு மேலதிக நீதிவான் இசுரு நெத்திக்குமாரவிற்கு சி.ஐ.டி அறிவித்தது. |
| ஒக்டோபர் 2018 | பலியானவரின் கடத்தல் மற்றும் கொலைக்காகப் பயன்படுத்தப்பட்ட ஜீப் வாகனத்தில் ஏதேனும் மனித எச்சங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் இருந்தனவா என ஆராய்வதற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளரை நீதிமன்றம் கட்டளையிட்டது. |
| 29 நவம்பர் 2018 | குற்றத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு கொழும்பு மேலதிக நீதவான் சி.ஐ.டி இனரிற்கு பணித்தார். |
| 28 பிப்ரவரி 2019 | நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலைய முன்னாள் குற்றவியல் பிரிவுப் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா, முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர ஆகிய மூன்று சந்தேக நபர்களுக்கும் எதிராக குற்றப்பகர்வுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் என சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.<br><br>முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கான பாதுகாப்புக் கடமையில் சேவையாற்றிய பல இராணுவ மற்றும் கடற்படை உத்தியோகத்தர்கள் |

| | |
|---|---|
| | தொடர்பாக மேலும் புலன்விசாரணைகள் நடைபெறுவதாகவும், எனினும் அவர்களது உத்தியோகபூர்வ பதிவேடுகளைத் தேடிப் பெறுவதற்கான முயற்சிகள் வெற்றியடையவில்லை எனவும் பிரதி மன்றாடியார் அதிபதி மேலும் தெரிவித்தார்.<br><br>தஜுடீனினால் உபயோகிக்கப்பட்ட மடிக்கணினி மற்றும் கைத் தொலைபேசி என்பவற்றின் பரிசோதித்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வரும் புலன் விசாரணைகளுக்கு பயனுள்ள ஏதேனும் தகவல்களைக் கண்டறிந்து தருவதற்குத் தவறின, என பிரதி மன்றாடியார் அதிபதி நீதிமன்றக்கு மேலும் தெரிவித்தார்.<br><br>நீதிவான் நெத்திக்குமார, புலன்விசாரணை தொடர்பான சாட்சியங்களைக் கண்டுபிடிப்பதில் முன்னேற்றம் இல்லாதிருப்பதாக மன்றில் வெளிப்படையாகத் தெரிவித்தார். அதனால், புலன்விசாரணைகளை முடிவுறுத்துவதற்கு துரிதப்படுத்தி மற்றும் வழக்கில் எதிராளிகளுக்கு எதிராக ஏதேனும் சாட்சியங்கள் இருப்பின் குற்றப்பகர்வுப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கும் வழக்குத் தொடருனர் தரப்புக்கு நீதவான் கட்டளையிட்டார். |
| 24 மே 2019 | தஜுடீன் கொலை வழக்கின் சட்ட நடவடிக்கை மற்றும் தண்டனையிலிருந்து குற்றஞ் சாட்டப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கு தவறான தகவல்களை வழங்கியமைக்காக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்காவிற்கு எதிராக குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 198 இன் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் குற்றச் சாட்டுகளை தாக்கல் செய்தார்.<br><br>வசிம் தஜுடீனின் கொலை வழக்கில் சட்டத் தண்டனையிலிருந்து குற்றஞ் சாட்டப்பட்டவர்களை மறைத்த குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்தல் விடுத்தது. |
| 27 ஜூன் 2019 | கொழும்பு மேலதிக நீதவான் ஷலனி பெரேரா, வசிம் தஜுடீனின் கொலை வழக்கில் முதலாவது குற்றவாளியாக குற்றஞ் சுமத்தப்பட்டிருந்த, நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேராவை வழக்கினின்றும் விடுதலை செய்தார். சட்டமா அதிபர் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மீது ஒரு குற்றப் பகர்வுப் பத்திரத்தை சேர்ப்பித்தார், அவர் 2012 கொலை தொடர்பான நீதிமன்ற விளக்கத்திற்கு முகங் கொடுக்கும் முதலாவது குற்றஞ் சாட்டப்பட்டவராக வந்தார். 2015 இல் வழக்கு மீளத் திறக்கப்படும் வரை “வாகன போக்குவரத்து விபத்து” எனத் தீர்மானித்து விளையாட்டு வீரரின் கொலையை மூடி மறைக்க முயற்சித்தமைக்காக, தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 198 இன் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளை முகங்கொடுக்கிறார். |
| 30 ஜூலை 2019 | ஹவ்லொக் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் வசிம் தஜுடீனின் மரணம் தொடர்பான சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டுக்காக சிரேஷ்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விளக்கத்திற்காக ஒக்டோபர் 23 அன்று திகதி குறிக்கப்பட்டது. |
| 7 ஆகஸ்ட் 2019 | முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் குற்றப்பகர்வு செய்யப்படுகிறார். |
| 27 ஆகஸ்ட் 2019 | பேராசிரியர் ஆனந்த சமரசேகரவிற்கு குற்றப்பகர்வுப் பத்திரம் அளிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுகிறார். |
| 16 ஜனவரி | ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தஜுடீனின் கொலை தொடர்பான |

| | |
|---|---|
| 2020 | சாட்சியங்களை மறைத்தமையுடன் குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் சிரேஷ்ட மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிற்கு எதிரான வழக்கில் மார்ச் 2 ஆம் திகதியன்று சமர்ப்பணங்களை மேற்கொள்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராய்ச்சி கட்டளையிட்டார். |
| 24 பிப்ரவரி 2020 | தேசிய மட்ட ரகர் விளையாட்டு வீரர் வசிம் தஜூடீனின் கொலை தொடர்பான சாட்சியங்களை மறைத்தமை தொடர்பாக முன்னாள் பிரதான சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஜூன் 11 ஆம் திகதி விளக்கத்திற்காக மீள் குறிக்கப்பட்டது. |
| 22 ஜூலை 2020 | தஜூடீன் கொலை வழக்கின் 3 ஆவது சந்தேக நபரான முன்னாள் பிரதான சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகர இறந்து விட்டதாக சட்டமா அதிபர் பதில் நீதவானிற்கு அறிவிக்கிறார். முதலாவது சந்தேக நபரான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க சுகவீனமுற்று சிகிச்சை பெறுகின்றார். |
| 26 செப்டம்பர் 2020 | மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கில், வழக்கின் சந்தேக நபர் காலமாகியதால் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வழக்கில் தீர்ப்பளித்ததுடன் மேலும் வழக்கு விசாரணைகள் தொடர்வதையும் முடிவுறுத்தியது.<br><br>கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரியின் உறவினர் சார்பில் தோன்றிய வழக்கறிஞரால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணத்தைக் கவனத்தில் கொண்டு, மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ண, பேராசிரியர் ஆனந்த சமரசேகர காலமாகியதை உறுதிப்படுத்தினார். அதன் பின்னதாக வழக்கின் மேலதிக நடவடிக்கைகளை முடிவுறுத்தினார். |
| 6 ஒக்டோபர் 2020 | ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில், நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி, சுமித் பெரேரா, ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தஜூடீனின் கொலை தொடர்பான புலனாய்வுகளை முழுமையாக அப்படியே ஒளித்து வைத்து விடுவதற்கு தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச மற்றும் பா.உ. நாமல் ராஜபக்ச ஆகியோர் தன்னை நிர்ப்பந்தித்தாக சாட்சியம் வழங்குவதற்கு குற்றவியல் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் ஏனைய அதிகாரிகளால் தான் அச்சுறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.<br><br>நேற்று (5), சாட்சியமளிக்கையில், நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலையத்தில் தான் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி எனவும் தஜூடீனின் மரணம் தொடர்பான புலனாய்வுகளை தான் மேற்கொண்டதாகவும் பெரேரா கூறினார். ஆரம்ப புலனாய்வுகள் மற்றும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களின் பின், தஜூடீனின் மரணம் மதுவருந்தி விட்டு வாகனம் செலுத்தியதன் விளைவாக வாகனம் விபத்தில் சிக்கி பின்னர் வாகனம் தீப்பற்றிக் கொண்டதால் ஏற்பட்டது என நீதிமன்றம் தீர்மானித்தது, என அவர் மேலும் தெரிவித்தார். எனினும், நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து, வழக்கு ஒரு கொலையெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர், தான் சி.ஐ.டி இற்கு அழைக்கப்பட்டதாக அவர் கூறினார். |

| **9. வெலிக்கடை சிறைச் சம்பவம், 2012** | |
|---|---|
| 9 நவம்பர் 2012 | வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைக் கைதிகளின் ஒரு குழுவை அடக்குவதற்கு இராணுவமும் விசேட அதிரடிப் படையினரும் (STF) பணியிலீடுபடுத்தப்பட்டனர். அக்கைதிகள் பயங்கரவாத சந்தேக நபர்களென அரசாங்கம் கூறியது. இந்தத் தாக்குதலில் 27 கைதிகள் கொல்லப்பட்டதுடன் 43 பேர்கள் காயமடைந்தனர். நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சம்பவம் நிகழ்ந்த பின் உடனடியாகவே சிறைச்சாலையுள் காணப்பட்டதாகவும், அதனால், படுகொலைகளின் போது இராணுவ வீரர்கள் சிறைச்சாலையினுள் பிரசன்னமாக இருந்ததை அவர் அறிந்திருந்தார் எனவும் நம்பப்பட்டது.<br><br>கிடைக்கப் பெற்ற இரண்டு இறப்புச் சான்றிதழ்களின்படி, இறப்பின் காரணம் துப்பாக்கிச் சூடாகும். எனினும் சூடு தொலைவிலிருந்தானது என ஒரு சான்றிதழ் குறிப்பிடுகின்ற வேளையில், நேரில் கண்ட சாட்சிகள், உயிரிழந்த அனைவரும் நெருக்கமான தூரத்தில் வைத்து சுடப்பட்டதாக உறுதிப்படுத்தினர். |
| 2012-2015 | சி.ஐ.டி இன் புலன்விசாரணைகள் முழுமையானவையல்ல. சம்பவம் நிகழ்ந்த சமயத்தில் கைதியாக இருந்த சுதேஷ் நந்திமால் எனும் நேரில் கண்ட சாட்சி, சி.ஐ.டி இனர் தனது வாக்குமூலத்தை முழுமையாக எடுக்கவில்லை, ஒரு சந்தர்ப்பத்தில் “இவ்வளவும் போதும்” என அவர்கள் கூறியதாகத் தெரிவித்தார்.<br><br>அப்போதைய புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான அதன் இடைக்கால அல்லது இறுதி அறிக்கை பகிரங்கப்படுத்தப் படவில்லை. மூவர் அடங்கிய அவ்வாணைக்குழு, கைதிகளின் மரணங்கள் சக கைதிகளினால் ஏற்பட்டது எனவும் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு விசேட அதிரடிப் படை மற்றும் இராணுவம் அழைக்கப்பட்டதை நியாயப்படுத்தியது. ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் மற்றைய இரு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட சில பரிந்துரைகளுடன் இணங்காததினால் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட முடியவில்லையெனவும் அமைச்சர் குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.<br><br>சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் P.W. கொடிப்புலியினாலும் மேலதிக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை கூட பகிரங்கப் படுத்தப்படவில்லை.<br><br>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டதின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புலன்விசாரணைகள் இடை நிறுத்தப்பட்டதாக அதன் தவிசாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாகச் சொல்லப்பட்டது. |
| 2014 | கொல்லப்பட்ட கைதிகளில் ஒருவரான விஜய ரோஹண அல்லது ‘குண்டு என்பவரின் தாய், சிரியாவதி மற்றும் அவரது மருமகள் ஆகியோர் பொய்யான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர். |
| 2015 | 2015 இன் ஆரம்பத்தில் நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 2012 சிறைச்சாலைச் சம்பவத்தின் விசாரணைக் குழு 2012 (CIPI) இனால் இச் |

| | |
|---|---|
| | சம்பவம் விசாரணைக்குள்ளானதுடன், அது அதன் அறிக்கையை ஜூன் 2015 இல் சமர்ப்பித்தது. அறிக்கையின் பரிந்துரைகள் பகிரங்கப்படுத்தப்பட்டன, ஆனாலும் சம்பவம் தொடர்பாக நடைபெற்று வரும் அல்லது புதிதான புலன்விசாரணைகளுக்கு குந்தகமாக அமையலாமென்பதால் அறிக்கையின் உள்ளடக்கங்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லையென, அப்போதைய நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கூறினார்.<br><br>சிறைக் கைதிகள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப் படையினர், மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், அப்போதைய இராணுவப் புலனாய்வுத் தலைவர் கபில ஹெந்தவிதாரண, அரச புலனாய்வு மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திர வாகிஷ்டா, மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்/மேல் மாகாணம் அநுர சேனநாயக்க உட்பட, ஏனைய பல்வேறு உயர் மட்டத்திலான தனிப்பட்டவர்களிடமிருந்தும் விசாரணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்தது.<br><br>விசாரணைக்குழுவிற்கான தனது வாக்குமூலத்தில், இந் நடவடிக்கை முன்னைய பாதுகாப்புச் செயலாளர், கோத்தபாய ராஜபக்ச பிரயோகித்த அழுத்தம் காரணமாக நடத்தப்பட்டது என, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆரியசிரி திசாநாயக்க உறுதிப்படுத்தினார். அத்தோடு சாட்சியம் வழங்குகையில், 798 விசேட அதிரடிப்படையினரை உபயோகித்து ஒரு சோதனை நடவடிக்கை நடத்துவதற்கான தேவை ஜூலை 17, 2012 அன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், அக்கூட்டத்தில் கோத்தபாய ராஜபக்சவும் பிரசன்னமாகியிருந்தார் என அப்போதைய சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் P.W.கொடிப்புலி கூறினார்.<br><br>தற்போது ஓய்வுபெற்றுள்ள விசேட அதிரடிப்படையின் முன்னாள் கட்டளை அதிகாரியும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான சந்திரசிரி ரணவன, 9.11.2012 அன்று நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கை விசேட அதிரடிப் படையினால் அதன் சுய இணக்கத்தின் பேரில் நடத்தப்பட்டதல்ல, ஆனால் அது 2012 இன் போது ஒரு தொடரான கலந்தாலோசனைகளைத் தொடர்ந்து அரச புலனாய்வுச் சேவைகள் (SIS) பணிப்பாளரும் மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு (TID) பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிமால் வாகிஷ்டவின் ஒருங்கிணைப்புடன் ராஜபக்சவின் பணிப்பின் பேரில் நடத்தப்பட்டது எனக் கூறினார். சம்பவம் நடைபெற்ற போது விசேட அதிரடிப்படை பாதுகாப்பு அமைச்சின் கீழேயே இயங்கியதெனவும் ரணவன உறுதிப்படுத்தினார். |
| ஜூன் 2015 | சித்திரவதையுடன் தொடர்புடைய மற்றும் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 162 இன் கீழான விடயங்கள் தொடர்பான மீறல் குற்றச்சாட்டுகள் மீது விசேட அவதானத்துடன் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாத குற்றச்சாட்டுகள் தொடர்பில் புதிதான குற்றவியல் புலன்விசாரணைகளை அறிக்கை பரிந்துரைக்கிறது. பொலிஸ்மா அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஒரு விசேட அணியினால் புலன்விசாரணைகள் நடத்தப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. |
| பிப்ரவரி 2016 | புற்றுநோய் பீடிக்கப்பட்டிருந்த சிரியாவதி விளக்க மறியல் காவலில் இருந்த சமயத்திலேயே இறந்தார். அவருக்கு பிணை பெற்றுக் கொள்வதற்கு அவரது கணவன் அல்விஸினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. அநீதிக்கெதிராக சட்ட நடவடிக்கையை, |

| | |
|---|---|
| | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமிருந்து அல்விஸ் நாடினார். இரண்டு வருடங்களுக்கு நீடித்த இந்த வழக்கு HRC/2926/14 இன் நடவடிக்கைகள், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது முடிவுற்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இது பற்றி விசாரித்த பொழுது, அவர்களின் பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அளிக்கப்பட்ட பரிந்துரைகள் குறித்து பிற்தொடர்ச்சி செய்வது தங்களது பணியல்லவெனவும், அது தெரிவித்தது. |
| 19 மார்ச் 2016 | குற்றவியல் விசாரணைத் திணைக்களம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் 2012 சிறைச்சாலை சம்பவத்தின் விசாரணை ஆணைக்குழு (CIPI) ஆகியவற்றில் சாட்சியமளித்த, சம்பவம் நடைபெற்ற சமயம் ஒரு கைதியாக சிறைச்சாலையிலிருந்த, சுதேஷ் நந்திமால் சில்வா, தான் இனந்தெரியாத ஆட்களால் பின்தொடரப்படுவதாகத் தெரிவித்தார். அவ்விதமானதொரு கறுப்பு நிற ஜீப் (62-0761 பதிவிலக்கத்துடனான பஜிரோ வகை) போதைப் பொருள் தடுப்புப் பிரிவிற்கு சொந்தமானதென கண்டறியப்பட்டது. அவர் (CIB I148/146இன் கீழ்)மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டினைப் பதிவு செய்தார். |
| ஜனவரி 2017 | பத்திரிகையாளர் கசுன் புஸ்சேவெல என்பவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு மனுவைத் தாக்கல் செய்த பின்னர், அவரிடமிருந்து ஆணைக்குழு ஒரு வாக்கு மூலத்தைப் பதிவு செய்தது.<br><br>பாதிப்படைந்த ஒரு தரப்புக்காக தோன்றும் சட்டத்தரணியொருவரால் அவர் பெறும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் நிட்டம்புவை பொலிஸில் ஒரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. |
| ஏப்ரல் 2017 | சம்பவத்தை புலன்விசாரணை செய்வதற்கு சி.ஐ.டி மற்றும் பொலிஸை நிர்ப்பந்திப்பதற்கு ஓர் ஆணையிட்டெழுத்தாணையை வேண்டி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சாட்சியொருவரால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. |
| 17 ஒக்டோபர் 2017 | சட்டமா அதிபருக்காக ஆஜராகிய, சிரேஷ்ட அரச வழக்கறிஞர் மாதவ தென்னக்கோன், விசேட அதிரடிப்படை, இராணுவம் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளிலிருந்தான அணிகளால் விசாரணைகள் நடத்தப்பட்டதாக நீதிமன்றத்திற்கு தெரிவித்தார். பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு அணியினால் புதிதாக புலன்விசாரணை நடத்தப்படுவதாகவும் 75 சதவீத புலன்விசாரணைகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளதுடன் புலன்விசாரணையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு மேலும் நான்கிலிருந்து ஆறு வார கால அவகாசத்திற்கு அனுமதி வேண்டினார். மனுதாரருக்காக தோன்றிய வழக்கறிஞர் K.S.ரட்ணவேல், புலன்விசாரணை ஓர் ஒளிவுமறைவற்ற வகையில் நடத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் முன்னேற்றம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்படல் வேண்டுமென வேண்டினார். |
| 2018 முற்பகுதி | சம்பவம் தொடர்பான புலன்விசாரணைகள் சி.ஐ.டி ஆல் முன்னெடுக்கப்பட்டது. |
| 20 மார்ச் 2018 | அடிப்படை மனித உரிமை மனுவின் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் வரை தன்னைக் கைது செய்தல் கூடாது என சி.ஐ.டி இன் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் சட்டமா அதிபர் உட்பட பிரதிவாதிகளைப் பணிக்கும் ஓர் இடைக்கால உத்தரவைக் கோரி பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ உயர் நீதிமன்றத்தில் ஓர் அடிப்படை உரிமைகள் மனுவைத் தாக்கல் செய்தார்.<br><br>சிறைச்சாலைகள் திணைக்கள முன்னாள் ஆணையாளர் எமில் ரஞ்சன் |

| | |
|---|---|
| | லமாஹேவா மற்றும் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ கைதிகளைக் கொலை செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். |
| 24 ஏப்ரல் 2018 | வழக்கின் நீதிமன்ற விசாரணை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் முன் எடுத்துக் கொள்ளப்பட்டது. கலவரத்தின் போது கைதிகளைக் கொல்வதற்கு யார் கட்டளை அளித்தது என்பதைக் கண்டுபிடிக்குமாறு புலன்விசாரணையாளர்களுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது. |
| 22 மே 2018 | சம்பவ தினத்தன்று சிறைச்சாலைக்குள் நுழைவதற்கு சட்டத்தை அமுல்படுத்துவோர் மற்றும் ஆயுதப் படையினருக்கு யார் கட்டளையிட்டது என்பது தொடர்பில் புலன்விசாரணை உத்தியோகத்தர்கள் தங்களது கவனத்தைச் செலுத்துவதற்கு மீண்டும் சி.ஐ.டி இனரிற்கு கொழும்பு மேலதிக நீதவான் சாமரி வீரசூரிய கட்டளையிட்டார். நீதிமன்றத்திடமிருந்து கட்டளைகள் இடப்பட்ட போதிலும், சி.ஐ.டி இனர் அவற்றை ஒரு போதும் பின்பற்றவில்லை. |
| 25 செப்டம்பர் 2018 | ரங்கஜீவ பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. |
| 22 நவம்பர் 2018 | ரங்கஜீவ பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவில் அவரது பதவியில் மீளிணைக்கப்பட்டார். |
| டிசம்பர் 2019 | புலன்விசாரணைகளை கூர்ந்து பின்பற்றி வந்த ஒரு பத்திரிகையாளர், சமூக வலைத் தளங்களில் ரங்கஜீவவிடமிருந்து விடுக்கப்பட்டதாக நம்பப்படும் பல அச்சுறுத்தல்களையடுத்து ஒரு முறைப்பாட்டினைப் பதிவு செய்தார். அச்சுறுத்தல்கள் குறித்தான புலன்விசாரணைகள் தொடர்கின்றன. |
| 21 ஜுன் 2019 | வெலிக்கடை சிறைச்சாலை கலவர வழக்கை விசாரிப்பதற்கு மூவர் அடங்கிய நீதிபதிக் குழாமொன்றை நியமிப்பதற்கு பிரதம நீதியரசரை சட்டமா அதிபர் வேண்டுகிறார். |
| 18 ஜுலை 2019 | வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தின் போது கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பாக பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பரிசோதகர் மோசஸ் ரங்கஜீவ மற்றும் சிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர் லமாஹேவகே எமில் ரஞ்சன் ஆகிய இரண்டு குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீது கொழும்பு மேல் நீதிமன்ற நீதாயம்குற்றப்பகர்வுப் பத்திரங்களை சேர்ப்பித்தது.<br><br>அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு நீதாயம் உத்தரவிட்டதுடன் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதிலிருந்து தடை செய்யப்பட்டனர்.<br><br>இதேவேளை, மூன்றாவதாக குற்றஞ் சாட்டப்பட்ட சிறைச்சாலைகள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இந்திக்க சம்பத் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை. பிரதி மன்றாடியார் அதிபதி டிலான் ரத்நாயக்க, மூன்றாவதாக குற்றஞ் சாட்டப்பட்ட நபரின் பிரசன்னமில்லாமலே வழக்கினை முன்னெடுப்பதற்கு வழக்குத் தொடருனர் எதிர்பார்ப்பதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். |
| 30 ஆகஸ்ட் 2019 | வழக்கில் மூன்றாவது குற்றவாளியாக பெயரிடப்பட்ட சிறைச்சாலைகள் புலனாய்வு உத்தியோகத்தர் இந்திக்க சம்பத் மீது குற்றப்பகர்வுப் பத்திரங்களை சேர்ப்பிக்காமலே வழக்கு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு நீதிமன்றம் கட்டளையிட்டது. சம்பத் ஜனவரி 2018 இலிருந்து தலை மறைவானதுடன் தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வதிவதாக நம்பப்படுகிறது. வழக்கு, விசேட மேல் நீதிமன்றத்தால் ஒக்டோபர் 14 இற்கு திகதி குறிக்கப்பட்டது. |
| ஜனவரி 2020 | சிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர், எமில் ரஞ்சன் லமாஹேவகே, 2012 வெலிக்கட சிறைச்சாலைக் கலவரம் தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது தன் மீது அரசியல் பழிவாங்கல் |

| | |
|---|---|
| | நோக்கங்களுக்கான தேவையை எதிர்பார்த்து தாக்கல் செய்யப்பட்டது எனக் குற்றஞ்சாட்டி, அரசியல் பழிவாங்கல் (2015-2019) சம்பவங்களை விசாரணை செய்யும் விசாரணை ஆணைக்குழுவிற்கு ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தார். |
| 19 ஜூன் 2020 | சிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர், எமில் ரஞ்சன் லமாஹேவகே ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.<br><br>கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக வருவதைத் தடுப்பதற்கு பல அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் வெலிக்கடை சிறைச்சாலைச் சம்பவத்தை உபயோகிப்பதற்கு முயற்சித்ததாக அவர் தெரிவித்தார். சம்பவத்தை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட நம்புவாசம் விசாரணைக்குழு சுயாதீனமாகச் செயற்படவில்லை, ஆனால், மாறாக இந்த அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் அக்கறைகளை நிறைவேற்றுவதற்கே அது முயற்சித்தது என்று கூறினார். இந்த வழக்கில் முதலாவதாக குற்றம் சாட்டப்பட்ட நபர் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், வழக்கில் கோத்தபாய ராஜபக்சவை குற்றஞ் சுமத்தி தொடர்பு படுத்துவதற்கு மறுத்த காரணத்தினால் தான் ஒரு வருடத்திற்கும் மேலாக விளக்கமறியலில் வைத்திருக்கப்பட்டதாகவும் அவர் ஆணைக்குழுவிடம் கூறினார். சி.ஐ.டி இன் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர தனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்காக அப்போதைய அரசாங்கத்துடன் சேர்ந்து சாட்சியங்களைப் புனைந்து சதி செய்ததாகவும், தனக்கு உரித்தான அனைத்துப் பதவியுயர்வுகளை அடைவதிலிருந்து தான் தடுக்கப்பட்டதாகவும் லமாஹேவகே கூறினார். |
| 22 ஜூன் 2020 | தலைமையக களப் படை பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார். வெலிக்கடை சிறைச் சம்பவம் தொடர்பான சாட்சியத்தின் மூலப்பிரதி காணாமற் போய்விட்டது எனக் கூறினார். சம்பவம் இடம்பெற்ற சமயம் தற்போது சிறையிலுள்ள 'வெள்ளசுதா' எனும் போதை மருந்து வியாபாரியைப் பிடிப்பதற்கான ஒரு நடவடிக்கையில் தான் ஈடுபட்டிருந்ததாக அவர் கூறினார். இதன் காரணமாக அவர் மற்றும் அவரது குடும்பம் மரண அச்சுறுத்தல்களைப் பெற்றதாகவும் அத்தோடு வெள்ளசுதாவிடமிருந்தானதாகத் தெரிவிக்கப்படும் அச்சுறுத்தல்கள் அடங்கிய இரண்டு இறுவட்டுகளை (CD) சமர்ப்பித்ததாகத் தெரிவித்தார். சிறைச்சாலையினுள் ஆயுதமில்லாத கைதிகள் பொலிசாரினால் சுடப்பட்டார்கள் என்ற ஒரு பொதுவான அபிப்பிராயத்தை ஊடகங்கள் மூலமாக உருவாக்குவதற்கு வெள்ள சுதாவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை ஒரு இறுவட்டு கொண்டிருந்ததுஎன அவர் கூறினார். |
| 26 ஜூன் 2020 | கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்ற நீதாயம், வெலிக்கடை சிறைக் கலவர வழக்கின் முதலாவது மற்றும் இரண்டாவது சந்தேக நபர்களான முறையே பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மற்றும் முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகியோரின் பிணை உத்தரவு ரத்துச் செய்யப்பட்டு அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் என கடுமையாக எச்சரித்தது. இரண்டு எதிராளிகளும் வழக்கு மற்றும் வழக்குத்தொடர்தல் தொடர்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு கருத்துகள் தெரிவித்ததாக நீதிமன்றத்திற்கு சட்டமா அதிபர் அறிவித்த பின்னர் நீதிமன்றம் இந்த எச்சரிக்கையை விடுத்தது. |
| 1 ஜூலை 2020 | சிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர், எமில் ரஞ்சன் லமாஹேவா ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்தார்.<br><br>2018 இன் நடுப்பகுதிகளில், திரு. மேர்வின் சில்வா சிறைச்சாலைக்கு வந்து, வெலிக்கடை சிறையில் கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பில் முன்னாள் |

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக நீதிமன்றத்தில் ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும்படி தன்னிடம் பிரேரித்ததாக லமாஹேவகே கூறினார். மேலும், தன்னைச் சந்திப்பதற்கு முன்னாள் பிரதம மந்திரி அலுவலகத்திலிருந்து ஒரு செய்தியுடன் வெலிக்கடை சிறைக்கு அசோக்க ஜயத்துங்க என்பவர் வந்து வெலிக்கடை சிறைச் சம்பவத்துடன் கோத்தபாய ராஜபக்சவின் பெயரைக் குறிப்பிடுவதற்கு தன்னைக் கேட்டதாகவும், அவ்வாறு செய்தால் தான் விரைவிலேயே விடுதலை செய்யப்படுவேன் என்று தனக்கு சொல்லப்பட்டதாகவும், லமாஹேவா கூறினார்.

மஹர சிறைச்சாலை அத்தியட்சகர் ஜகத் சந்தன வீரசிங்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

முன்னாள் அமைச்சர் தலதா அத்துக்கோரள சிறைச்சாலைக்கு ஓர் அவதானிப்பு விஜயம் மேற்கொண்ட போது, தான் திரு.எமில் ரஞ்சனை விடுவிப்பது குறிப்பது பற்றி கலந்துரையாடியாதாக வீரசிங்க தெரிவித்தார். முன்னாள் அமைச்சர் வெலிக்கடை சிறைச் சம்பவம் தொடர்பாக கட்டளைகள் தந்த நபர்கள் யார் எனப் பெயர்களைக் கூறும்படி தன்னைக் கேட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு, தான் இந்த விடயம் பற்றி அறிந்திருக்கவில்லை என தெரிவித்ததாகவும், அப்போது அமைச்சர் அவர் நீதிமன்ற வழக்கில் அவர் தோன்றி பின் விடுவிக்கப்படுதலுக்கான கட்டளையைப் பெறல் வேண்டுமென கூறியதாக திரு வீரசிங்க கூறினார். திரு.கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிரான ஒரு சூழ்நிலை அங்கிருந்ததால், சம்பவத்திற்கு உத்தரவிட்ட நபர்களின் பெயர்களைத் தரும்படி அமைச்சர் கேட்டமை, சிறைச்சாலைச் சம்பவத்துடன் கோத்தபாய ராஜபக்சவின் பெயரை இணைப்பதற்கான நோக்கம் கொண்டது, எனவும் வீரசிங்க தெரிவித்தார். சிறைச்சாலை அத்தியட்சகர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரான திரு.எமில் ரஞ்சனின் குற்றமற்றதன்மை குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவிற்கு அவரால் தலைமை தாங்கப்படும் சிறைச்சாலை அத்தியட்சகர்கள் ஒரு கடிதம் அனுப்பியதாக அவர் கூறினார். திரு.கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக வந்தால் நாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுமென தாங்கள் நம்பியதாக அவர் தெரிவித்தார். ஜனாதிபதியின் இடையீட்டுடன் சிறைச்சாலைகளில் முக்கியமான மாற்றங்கள் நடைபெற்று வருவதாகவும், சிறைச்சாலைகள் திணைக்களத்திலிருந்து ஒரு பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்துடன் எதிர்காலத்தில் சிறை நடவடிக்கைகளில் ஒரு தெளிவான மாற்றம் இருக்குமெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சம்பவத்தை புலன்விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட பந்துல அத்தபத்து குழுவின் உறுப்பினரான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் குணசேன தீனபந்து தெரிவிக்கையில், குழு 17 பரிந்துரைகள் உட்பட, ஒரு 540 பக்க அறிக்கையை சமர்ப்பித்தது என்று கூறினார். சம்பவம் நிகழ்ந்த மூன்று நாட்களின் பின் அப்போதைய அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவர்களின் அறிவுறுத்தல்களின் பேரில் அமைச்சின் செயலாளரால் குழு நியமிக்கப்பட்டது என்று கூறினார். எனினும், இந்த அறிக்கையைக் கவனத்தில் எடுக்காது, நல்லாட்சி அரசாங்கத்தால் மற்றொரு குழு நியமிக்கப்பட்டமை, கேள்விக்குரியது என்றார். நல்லாட்சி அரசாங்கத்தின் போது அரச உத்தியோகத்தர்களுக்கு எதிரான செய்முறையின் ஓர் அங்கமாக கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக

| | |
|---|---|
| | செயற்படுவது இதன் இலக்காக இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார் |
| 7 ஜுலை 2020 | பொலிஸ் தலைமையக களப்படைப் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ விசாரணை ஆணைக்குழு முன் சாட்சியம் வழங்கினார். சிறைச்சாலையில் மோதல் இடம்பெற்ற தினத்தன்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவினால் சிறைச்சாலைக்கு தான் அனுப்பப்பட்டதாக அவர் ஒத்துக்கொண்டால். அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் தான் விடுவிக்கப்படுவேன் என முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தன்னிடம் உறுதியளித்ததாக ரங்கஜீவ தெரிவித்தார். போதைப் பொருள் கடத்துவோர்கள் மற்றும் சில அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் வேண்டுகோளின் படி பொய்யான குற்றச்சாட்டுகளை கட்டமைப்பதன் மூலம் சேவையிலிருந்து தன்னை இடைநிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார். |
| 20 ஆகஸ்ட் 2020 | முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவவினால் பதிவு செய்யப்பட்ட ஒரு முறைப்பாட்டின் பின் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, முன்னாள் அமைச்சர் D.M.சுவாமிநாதன், சி.ஐ.டி இன் பொலிஸ் அத்தியட்சகர் சித்திரானந்த விக்கிரமசேகர மற்றும் ஏனைய பல்வேறு நபர்கள் ஆணைக்குழுவின் முன் ஆஜரானர்கள். |
| 24 ஆகஸ்ட் 2020 | அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் முன்னாள் அமைச்சர் தலதா அத்துக்கோரள மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தோன்றினர். |
| 24 செப்டம்பர் 2020 | அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர சாட்சியமளிக்கையில், சிறைச்சாலைகள் சீர்திருத்தம், புனர்வாழ்வு, மீள்குடியேற்ற முன்னாள் அமைச்சர் D.M.சுவாமிநாதனின் அறிவுறுத்தல்களின் படி, தான் 2012 வெலிக்கடை சிறைச் சம்பவம் தொடர்பில் புலன்விசாரணைகளின் மீளவாரம்பித்தலிற்கு உத்தரவிட்டதாகத் தெரிவித்தார். கால அவகாசம் பற்றி கேட்ட பொழுது, அந்த சமயத்தின் போது நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) அமர்வினை அண்டியதாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். |

| **10. ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவம், 2013** | |
|---|---|
| 1 ஆகஸ்ட் 2013 | இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள வெலிவேரிய எனும் கிராமத்தில், ரத்துபஸ்வல எனுமிடத்திலுள்ள ஒரு தொழிற்சாலையிலிருந்து அமிலக் கழிவு வெளியே விடப்படுவதால் குடிநீர் மாசடைவதற்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் செய்த ஆயுதம் தரிக்காத குடிமக்கள் மீது இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவு இராணுவ வீரர்கள் மற்றும் கரந்தடிப்படை (கொமாண்டோ) படையணியினரும் ஓர் ஆயுதத் தாக்குதலை நடாத்தினர். பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்னர் இராணுவம் சம்பவ இடத்திலிருந்த ஊடகவியலாளர்களை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். சூட்டுச் சம்பவம் நிகழ்ந்ததையடுத்து, அதில் 3 குடிமக்கள் கொல்லப்பட்டதுடன் 30 இற்கும் அதிகமானோர் படுகாயங்கள் அடைந்தனர். |
| 3 - 6 ஆகஸ்ட் 2013 | வெலிவேரியவில், 19 வயது மற்றும் 17 வயது இளைஞர்கள் உட்பட, 3 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டமை மற்றும் குடிமக்கள் மீதான தாக்குதல் தொடர்பாக இராணுவத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளை புலன்விசாரணை செய்வதற்கு ஓர் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட |

| | |
|---|---|
| | சபையொன்றினை இலங்கை இராணுவம் உடனடியாக அமைத்தது. சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன சம்பவம் தொடர்பில் ஒரு சர்வதேச விசாரணைக்கு கோரினர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பவம் பற்றி விசாரணை செலுத்துவதற்கு ஒரு விசாரணை ஆணைக்குழுவை அறிவித்தது. |
| 6 ஆகஸ்ட் 2013 | இலங்கை ஆசிரியர்கள் சங்கம் (CTU) மற்றும் சுயாதீன கல்விப் பணியாளர்கள் சங்கம் (IEEU), கடந்த வாரம் வெலிவேரியவில் இராணுவத்தினால் பாடசாலை செல்லும் இரண்டு சிறுவர்கள் கொல்லப்பட்டமைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தது |
| 9 ஆகஸ்ட் 2013 | சம்பவத்தை அறிவித்த ஊடகங்கள் மீது இராணுவம் அழுத்தத்தைப் பிரயோகித்தது. |
| 18 ஆகஸ்ட் 2013 | சம்பவத்தினை அறிவித்த ஊடகங்கள் மீதான இராணுவ அச்சுறுத்தல் தொடர்ந்தது. |
| 23 ஆகஸ்ட் 2013 | மூவர் கொல்லப்பட்ட, ஆகஸ்ட் 1 ஆம் திகதியன்றான வெலிவேரிய சம்பவம் தொடர்பாக இராணுவத்தால் நடத்தப்படும் புலன்விசாரணைகளுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியது. அத்தோடு, மூன்று மரணங்களுக்கும் இராணுவமே குற்றஞ்சாட்டப்படல் வேண்டுமெனத் தெரிவித்து அவர்கள் கம்பஹா பிரதான நீதவான், டிக்கிரி ஜயத்திலக்கவிடம், இராணுவத்தால் நடத்தப்படும் அனைத்து புலன்விசாரணைகளையும் நிறுத்துவதற்கு வேண்டினர். |
| 21 ஆகஸ்ட் 2013 | வெலிவேரிய சூட்டுச் சம்பவத்தை விசாரணை செய்த இராணுவ நீதிமன்றம் அதன் அறிக்கை இராணுவத் தளபதியிடம் சமர்ப்பித்தது. இந்த அறிக்கை ஒரு போதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. |
| 28 ஆகஸ்ட் 2013 | வெலிவேரிய ஆர்ப்பாட்டங்களின் போது கொல்லப்பட்டவர்களின் மரணம் தொடர்பாக கம்பஹா நீதவான் டிக்கிரி K.ஜயத்திலக்கவினால் நீதவான் விசாரணை இடம்பெற்றது.<br><br>வெலிவேரிய கொலைகளில் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு பிரிகேடியர் மற்றும் அவர்களின் லெப்டினட் கேர்ணல் அதிகாரிகளையும் இராணுவத் தளபதி இடைநிறுத்தம் செய்தார். இராணுவச் சட்டத்தை மீறியவர்கள் இராணுவ விசாரணைக்கு உட்படுவார்களென இராணுவம் அறிவித்தது. |
| 18 செப்டம்பர் 2013 | ரத்துபஸ்வல சம்பவம் தொடர்பில் சாட்சியங்கள் வழங்கிய சாட்சிகளை கொழும்பு குற்றவியல் பிரிவைச் (CCD) சேர்ந்த உத்தியோகத்தர்கள் அச்சுறுத்துவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றஞ்சாட்டியது. |
| மே 2014 | சூட்டுச் சம்பவத்தில் அவர்களின் சம்பந்தப்படுதலுக்காக இடைநிறுத்தப்பட்ட இராணுவ உத்தியோகத்தர்கள் பணியில் மீளிணைக்கப்பட்டனர். ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவப் படையணியை கட்டளையிட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு இராணுவ இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். எனினும், சம்பவத்தைத் தொடர்ந்து பிரிகேடியர் தேசப்பிரிய பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. |
| மார்ச் 2016 | முன்னாள் பொலிஸ்மா அதிபர் N.K.இலங்கக்கோனால் சம்பவம் தொடர்பான விசாரணைப் பொறுப்பு சி.ஐ.டி இடம் கையளிக்கப்பட்டது. |
| 24 மார்ச் 2017 | வெலிவேரிய, ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவத்துடன் தொடர்பான இராணுவத்தினர் சி.ஐ.டி இனால் கைது செய்யப்பட்டனர். எனினும்,தடுப்புக் காவலில் எடுக்கப்பட்ட இராணுவத்தினருக்கு எதிராக இது வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என இராணுவப் பேச்சாளர் ரொஷான் |

| | |
|---|---|
| | செனவிரட்ன கூறினார். |
| ஏப்ரல் 2017 | 2013 இல் இராணுவத்தால் சுடப்பட்ட 33 பேர்களுக்கு 4.8 மில்லியன் ரூபாய்களையும் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று இளைஞர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 1 மில்லியன் ரூபாய்களையும் அரசாங்கம் நட்ட ஈடாக அளித்தது. |
| 3ஏப்ரல் 2017 | பாதிப்படைந்த தரப்புக்காகத் தோன்றும் வழக்கறிஞர் ஜயந்த தெஹிஹத்தகே, சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் இராணுவத்தின் கீழ் மட்ட உத்தியோகத்தர்களே எனவும், துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு கட்டளையிட்ட உயர் தரத்து அதிகாரிகளை சி.ஐ.டி கைது செய்யக் கட்டளையிடுவதற்கு மன்றை வேண்டினார். |
| 25 மே 2017 | சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டமைக்காக பொலிசாரின் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் பிரிகேடியர் அநுர தேசப்பிரியவைக் கைது செய்தது. |
| 11 ஜூலை 2019 | ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவ வழக்குத் தொடர்பாக நீதாயத்தினை நியமிக்குமாறு சட்டமா அதிபர் நீதியரசரை வேண்டுகிறார். |
| 11 செப்டம்பர் 2019 | ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பகர்வுப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார். |